223478

# கிராமஊழியன்

1924 செப்டம்பர்-அக்டோபர்

JL
Y31mN27GR
N29.2.12
223478

428

Regd No. M. 1930. உ வந்தேமாதரம். Annual Sub. Rs 2.

# கிராமானுகூலன்.

(ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.)

# GRAMANUKULAN.

| புத்தகம் 2 | 1929-வரு செப்டம்பர் அக்டோபர்மீ<br>சுக்கில வரு புரட்டாசிமீ | ஸஞ்சிகை 12 |
|---|---|---|

13 DEC 1929

சந்தா விபரம்

உள்நாடுகளுக்கு வருடசந்தா தபாற்கூலி உள்பட ரூ. 2—0—0
வெளிநாடுகளுக்கு ஷை ஷை ,, 2—8—0
தனிப்பிரதி ,, 0—3—0

விஷயசூசிகை

| | | |
|---|---|---|
| 1 | இரண்டாவது ஆண்டு நிறைவு பத்திராதிபர் | 235 |
| 2 | தஞ்சைஜில்லா கி.உ. க்கள் மகாநாடு நடவடிக்கைகள் | 236 |
| 3 | ஷை தீர்மானங்கள் | 237 |
| 4 | ஆரம்பக்கல்வியின் தற்காலநிலைமை (தமிழ்மாணவன்) | 239 |
| 5 | கிராம சுகாதார வாரவிழா | 242 |
| 6 | கிராம பஞ்சாயத்து புத்தகசாலைகள் [ஸ்ரீமான் சி. திருவேங்கடப்ப நாயுடு] | 243 |
| 7 | தஞ்சாவூர் தாலூகா கி. உ. சங்கம் | 245 |
| 8 | தஞ்சாவூர் ஜில்லா கி. உ. மகாநாடு | 246 |
| 9 | ராணாபிரதாபசிம்மன் or ரஜபுத்திரதேசபக்தி (ஸ்ரீமான் S. மகாலிங்க சர்மா) | 247 |
| 10 | வேப்பமரம், ஔஷதியின் சிறப்பு. | 249 |
| 11 | கிராம உத்தியோகஸ்தர்களுக்கோர் விக்ஞாபனம். [ஸ்ரீமான் S. M. ராஜகோபாலய்யங்கார்] | 251 |
| 12 | சேலம், கிருஷ்ணகிரிதாலூகா கி.உ. சங்கம் | 252 |
| 13 | கிராம கணக்குகளும், ரயத்துகளின் உரிமையும் | 253 |
| 14 | மலையாளம் ஜில்லா கி. உ.க்கள் மகாநாடு | 253 |
| 15 | தஞ்சைஜில்லா கி. உ. க்கள் மகாநாடு தொடர்ச்சி | T 3. |

விளம்பர விகிதம்

பக்கம் 1 (2 கலம்) மீ 1-க்கு ரூ. 10 ½ கலம் ¼-க்கு மீ 1-க்கு ரூ. 2—8
ஷை ½ (1 கலம்) ஷை ,, 5 ⅛ ஒரு 1-க்கு ஷை அணா 8

N. ஆபத்ஸகாய ஐயர், பத்திராதிபர்.

கிராமானுகூலன் ஆபீஸ் :—கும்பகோணம்.

உ
வந்தேமாதரம்.

ரிஜிஸ்டர் நெ. M 1930 ] [வருடசந்தா ரூ. 2—0—0

# கிராமானுகூலன்.

(ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை).

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கேதுவேண்டும்" (பாரதி)

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே," (ஔவை(

| புத்தகம் 2 | சுக்கிலஹு புரட்டாசிமீ | ஸஞ்சிகை 12 |
|---|---|---|

## இரண்டாவது ஆண்டு நிறைவு.

நமது கிராமானுகூலன் பத்திரிகைக்கு இரண்டாவது ஆண்டு இந்த 12-வது சஞ்சிகையோடு பூர்த்தியாகிறது. ஒரேவருஷத்தில் 12 சஞ்சிகைகளை பிரசுரிக்க முடியாத காரணத்தால் இரண்டு வருஷகாலத்தில் 12 சஞ்சிகைகளைமுடித்து இரண்டாவது ஆண்டை பூர்த்தி செய்துகொண்டோம். ஒவ்வொருமாதத்திலும் தவராது குறித்ததேதியில் பத்திரிகை பிரகாரமாவதுதான் விசேஷமாகும் அம்மாதிரி நடைபெற முடியாமலிருப்பது பத்திராதிபரைப் பொறுத்த விஷயமாக மாத்திரமில்லை. சந்தாதார்களும் தங்கள்கடமையையுணர்ந்து முன்பணம் அனுப்பியிருப்பார்களேயானால் இப்படி நேர்ந்திராதென்று கூறுவோம். சிற்சில சந்தாதார்கள் முன்பணம்கொடுத்தும் சில அபிமானிகள் நன்கொடைகள் அளித்தும் பத்திரிகையைவிடாது அபிவிர்த்தி செய்யவேண்டுமென்று அக்கரையுடன் ஆதரவளித்து வந்ததாலும் வருகிறபடியாலும் விடா முயற்சியுடன் பத்திராதிபரும் உழைத்துவருவதால் இரண்டு மாதத்திற்கொருமுறையாக பத்திரிகை வெளிவந்துகொண் டிருக்கிறது, சொந்த அச்சாபீஸ் இல்லாதவரையில் காலத்தில் குறித்தபடி பத்திரிகை வெளிவருவது கஷ்டமாகவே யிருக்கும், பத்திரிகையிடத்தில் அபிமானமுள்ள பல சந்தாதாரகள் ஆயிரக்கணக்கா யுள்ளவர்கள் இன்னமும் தங்கள் சந்தாதுகையை அனுப்பிவைக்காதது தான் இவ்வளவுதாமதத்திற்கும் காரணமென்பதை மறுமுறையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். எல்லா சந்தாதார்களும் தங்கள் சந்தாதுகையை உடனே மணியார்டர்செய்து சொந்த அச்சாபீஸ் ஏற்பட உதவியளித்து கிராம உத்தியோகஸ்தர்களுக்காக உழைத்துவரும் இந்த ஒரே பத்திரிகையை மூன்றாவது ஆண்டுமுதல் சரிவர நடைபெறும்படி செய்யவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம்,

கிராம உத்தியோகஸ்தர்கள் விஷயமாகவே இப்பத்திரிகை அதிகம்உழைத்துவருவதை நன்னிலம் தாலூகா கி.உ. சங்கத்தார் தஞ்சைஜில்லா கலெக்டருக்கு வரவேற்பு பத்திரமளிக்கபோது தெரிவித்துக்கொண்டனர். கலெக்டர்மிஸ்டர் D.H. போல்டன் I,C.S, துரையவர்கள் இதை மிகப்பாராட்டி ஒவ்வொரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் பத்திரிகை இன்றியமையாததென்றும் உங்கள் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக உழைத்துவரும் இந்த பத்திரிகையை கிராமஉத்தியோகஸ்தர்கள் ஒவ்வொருவரும் ஆதரிக்கவேண்டுமென்றும் இதனால் உங்கள் குறைகள் நிவர்த்தியாகி அனேக நன்மைகள் உண்டாகுமென்றும் பதிலளித்தார்களாம். இப்பத்திரிகையினால் இதுவரையில் ஏற்பட்டிருக்கும் பலவித நன்மைகளையும் சந்தாதார்கள் அறிந்திருக்கிற படியாலும் இடமின்மையாலும் எழுதாது விடுகின்றோம். பல சந்தாதார்கள் ஞாபக மறதியினாலேயே தங்கள சந்தாத்துகையை அனுப்பாம லிருக்கின்றனர். ஆயிரக்கணக்காய் சந்தா பாக்கியிருக்கும்போது ஒவ்வொருமாதமும் தபாற் செலவுக்குக்கூட கஷ்டப்படவேண்டி நேரிடுகிறது பத்திராதிபர்படும்கஷ்டத்தை எழுதஆரம்பித்தால் மிக விரியும். இதைஅன்பர்கள் உணர்ந்து நடந்துகொண்டால் பத்திரிகை இனி காலம் தவராது அதிக பக்கங்களுடனும் வெளிவந்து பலவிதநன்மைகளை செய்யும் என்பது திண்ணம்.

அன்பர்கள் எல்லோரும் புதுவருடத்துக்கு தங்களாலியன்றவரையில் புதிய சந்தாதார்களை சேர்த்துக் கொடுத்து உதவிபுரிய வேணுமாய் பிரார்த்திக்கிறோம:

223478

# தஞ்சாவூர் ஜில்லா கி. உ. க்கள் மகாநாடு.

## நடவடிக்கைகள்,

தஞ்சை ஜில்லா கிராம உத்தியோகஸ்தர்களின் மகாநாடு13-10-29மாலை3-மணிக்கு தஞ்சைடவுன் தெற்குவீதி வீரராகவ உயர்தரபாடசாலை கட்டிடத்தில் தஞ்சை நகரசபைத் தலைவரும் பாப்பநாட்டு இளைய ஜமீன்தாருமான ராவ் பகதூர் பி. எஸ். ராஜப்பா அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. ஜில்லாவின் பல விடங்களிலிருந்தும் பிரதிநிதிகள் ஏராளமாக வந்திருந்தனர். முதல் முதலில் தலைவர் அவர்கட்கு ஒருவரவேற்புப்பத்திரம் படித்து அளிக்கப்பட்டது. பின்பு அக்கிராசனர் தனனே அக்கிராசனம் வகிக்கும்படி கேட்டுகொண்டதற்குத் தன் வந்தனத்தைச்செலுத்திவிட்டுக் கிராம உத்தியோகஸ்தர்களின்முன்னேற்றத்தில் தனக்கு மிகுந்தசிரத்தை உண்டென்றும், அவர்களின் முன்னேற்ற விஷயமாய் சர்க்கார் அதிகாரிகளுக்குச் சரியானபடி அவர்களின் குறைகளை எடுத்து காண்பிக்காமலிருந்தால் அவர்களின் காரியங்களைச் சித்தித்துக் கொள்வது சிரமமாயிருக்கும் என்றும், கிராம உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தை ரூபா 30-க்குஉயர்த்தவேண்டும் என்று கேட்பதானது மிகவும்நியாயமானதேயென்றும், தன் ஜமீன்தாரியில் அனேகம் கிராம உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளம் குறைந்ததாயிருப்பதை முன்னிட்டு தாம்தமதுஎஸ்டேட்டிலிருந்து சம்பளத்துக்காகப் பணஉதவி செய்து வருவதாகவும், கிராமஉத்தியோகஸதர்களின்சம்பளங்களை உயர்த்தும்படி சட்டசபையில் தானிருக்கும்போது கேட்கையில் அதிகாரிகள் பணவகை சௌகரிய மில்லாததால் அப்படிசெய்ய முடியவில்லையென்றும், தவிர கிராமாதிகாரிகளுக்குப்பூர்ணமாய் வேலைகள் இல்லாததால் வேறு வேலைகள் ஏற்றுக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டதென்றும், ஆகையால் கிராம அதிகாரிகள் தங்களுக்கு ரொம்ப வேலைகள் இருக்கும் என்ற விஷயத்தைக் காட்டவேண்டியது அவசியமென்றும் ரிவினியூபோர்டு இவைகளைப்போல் சில அனாவசியமாக சர்க்காரில் வைத்துக்கொண்டிருக்கிற இலாக்காகளை எடுத்துவிட்டால் அதன் மூலமாய்ப்பணங்கள் மிச்சமேற்பட்டு அதைகிராமாதிகாரிகளுக்கு சம்பளம் உயர்த்தவேண்டியதற்கு மனமிருந்தால் சர்க்கார் உபயோகிக்கலாமென்றும், ரூபாய்30க்கு சம்பளத்தைஉயர்த்தும்படிகேட்பது சர்க்காருக்கு சொல்ப விஷயமென்றும் கிராமாதிகாரிகளைச் சரிவர மேலதிகாரிகள் மரியாதையாய் நடத்திவரவேண்டிய விஷயமாய் தீர்மானங்கள் மூலமாய் இதைக்கேட்பது உசிதமில்லை யென்றும், கிராமாதிகாரிகள் தானே திருந்தும்படி செய்துகொள்ள வேண்டுமென்றும், இதற்கு உபாயம் இவர்களிடத்திலேயே இருக்கிறதென்றும், அங்கங்கேயுள்ள தாலூகா சபைகளில் அங்கத்தினர்களாகச் சேர்ந்து ஜில்லா சங்கத்தைப் பலப்படுத்தப் பாடுபடவேண்டுமென்றும் சென்னார்.

பிறகு கிராமாதிகாரிகளாகிய ஸ்ரீமான்கள் மகாலிங்கய்யர் G கிஷ்ணசாமிய்யர் T S வெங்கட்டராம அய்யர், V சுப்பராமய்யர். கிராமஉத்தியோகஸதர்களின் கஷ்ட நிஷ்டூரங்களைப் பற்றிச்சில உபந்நியாசங்கள் செய்தார்கள். அப்போது கிராமாதிகாரிகள் தான் சர்க்காருக்கு அடிப்படை யென்றும் அவர்கள் எவ்வளவு பொறுமையாகவும் ராஜவிசுவாசத் துடனும் வேலை செய்துவந்தும் தங்கள் குறைகள் தீர்க்கப்படாமலிருந்துவருகிறதென்றும், அவ்விதமிருந்து வருவதற்குக் காரணம் தங்களிடத்தில் ஒற்றுமை இல்லை யென்பதைக் காட்டுகிறதென்றும், 1920-ம் வருஷத்தில் எவ்வளவு ஊக்கத்துடன் இருந்தார்களோ அப்பேர்பட்ட ஊக்கம் இப்போது அவர்களுக்கு இல்லையென்றும் எல்லோரும் சங்கங்களில் அங்கத்தினர்களாகச்சேர்ந்து ஜில்லாசபையை பெலப்படுத்தித் தாங்கள் ஊக்கத்துடனும் ஒற்றுமை யுடனும் வேலைசெய்து வந்தால் குறைகள் உடனே தீர்ந்துவிடுமென்றும் பேசினார்கள்.

அரந்தாங்கி, கி. உ. சங்க காரியதரிசி ஸ்ரீமான் S. மகாலிங்கய்யர் "கிராமானுகூலன்" பத்திரிகையால் கி. உக்களுக்கு விளையும் நன்மைகளை எடுத்துக் கூறி எல்லோரும் கிராமானுகூலன் பத்திரிகையை ஆதரிக்கவேணுமாய் கேட்டுக்கொண்டார்.

கிராமானுகூலன் ஆசிரியர் ஸ்ரீமான் ஆபத்ஸகாயய்யர் பேசும்போது கிராமாதிகாரிகளுள் ஊக்கம் வரவரக் குறைந்து வருவதைக் குறித்துத் தாங்கள் ஏற்கனவே செய்துவந்த முயற்சியால்தான் ரூபாய் 15 எல்லோருக்கும் கிடைத்ததென்றும், அப்பேர்பட்ட முயற்சியை இன்னும் கைவிடாமல் உழைக்கும் பட்சத்தில் இப்போது கேட்கிற ரூபாய் 30-ம் வெகுசுலபமாக அவர்களுக்குக் கிடைத்துவிடும். என்றும், பம்பாய் இன்னும் மற்ற இராஜதானியிலும் புதுக்கோட்டை சமஸ்தானத்திலும் கிராம உத்தியோகஸ்தர்கள் அடைந்துவரும் சௌகரியங்களை விவரித்து எடுத்துக் காண்பித்தும் ஸ்ரீமான் ஸர்தார்படேல் அவர்களைபேட்டிகண்டுபார்டோலி கி. உ. க்கள் விஷமாய் தெரிந்துக் கொண்டவைகளை எடுத்துக்கூறி சபைகளில் சேர்ந்து ஒத்து உழைக்க வேணுமாய் மன்றாடிக் கேட்டுக்கொண்டார்.



## தீர்மானங்கள்.

—:o:—

1. மாக்ஷிமை தங்கிய நமது ஜார்ஜ் சக்கிரவர்த்தி அவர்களுக்கு ஏற்பட்ட தேக அசௌகரியம் சொஸ்தமாகிவிட்டதைகுறித்து இம்மகாநாடு தங்களுடைய சந்தோஷத்தை தெரிவித்து கொள்வதோடு நமது சக்கரவர்த்தியவர்கள் நீடூழிகாலம் சுகமே வாழ்க கடவுளைப்பிரார்த்திக்கிறோம்.

2. இம்மகாநாட்டார் தங்களுடைய மனப்பூர்வமான ராஜவிசுவாசத்தை தெரிவித்து கொள்ளுகிறார்கள்.

3. தஞ்சைஜில்லாவில் கிராம உத்தியோகஸதர்கள் இதரசர்க்கார் உத்தியோகஸதர்களைப்போல் சதாகாலமும் வேலைசெய்து வருகிறபடியால்கிராம உத்தியோகஸ்தர்களுக்கு மாதசசம்பளம் ரூ 30-ம் சிப்பந்திகளுக்கு ரூ 10-ம் கொடுக்க வேணுமாய் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

4. கிராம உத்தியோகஸதர்களுக்கு ஜமாபந்திபடி ரூ 10 கொடுத்துவந்ததை நிறுத்திவிட்டதைப்பற்றி இம்மகாநாட்டார் மிக மனவருத்தம் அடைவதாயும் இனிதாலுக்கா, டிவிஷன் முதலிய விடங்களுக்கு ஜமாபந்தியுள்பட சர்க்கார் அலுவலாய்ப்போகும் காலங்களுக்கு தினசரிப்படி ரூ 1. வீதம் மைலேஜூம் கொடுக்க வோணுமாய் கேட்டுக்கொள்ளுகிறார்கள,

5 சென்னை ராஜதானியில் இதர எல்லா ஜில்லாக்களிலும் பரம்பரை பாத்தியமிருந்து வருவதுபோல இத்தஞ்சை ஜில்லா கிராமஉத்தியோகஸதர்களுக்கும் பாம்பரை பாத்தியம் கொடுக்கவேணுமாய் இம்மகாநாட்டார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்

6. கிராம உத்தியோகஸதர்களுக்கு தற்காலம் சப்ளை செய்யப்பட்டுவரும் ஸ்டேஷனரி சாமான்கள் முற்றிலும்போதாமலிருப்பதாலும் எந்தவிதத்திலும் ஷை சாமான்களைக்கொண்டு சர்க்கார்வேலையைப்பார்க்க முடியாமலிருப்பதால் ஷை சப்ளை விஷயமாய் ஒரு நூதன திட்டம் ஏற்படுத்தி ஷை சாமான்களை வெண்டர் தபால் மூலியமாய் அனுப்பவேண்டுமென்று இம் மகாநாட்டார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

7. இப்பொழுது கிராம உத்தியோகஸதர்களுக்கு பாரங்கள் சப்ளை செய்யும் முறையானது விசேஷ கஷ்ட நஷ்டங்கள் உண்டாகி வருவதால் ஜமாபந்தி காலத்திலேயே கி உக்களிடம் இண்டெண்டு பெற்றுக்கொண்டு செண்டர்தபால் மூலமாய் சப்ளை செய்ய வேணுமாய் கோட்டுக் கொள்ளுகிறார்கள்

8. கிராம உத்தியோகஸ்தர்கள் தங்களுடைய ரிக்கார்டுகளை பந்தோபஸ்தாய் வைத்து கொள்ள தலா ஒருபெட்டி ஸப்ளை செய்ய வேணுமாயும் G. O. $\frac{1958}{1920}$ நெ. உத்திரவுப்படி தலா நான்கு தஸ்தா துண்டுகள் கொடுக்கவேணுமாயும்கேட்டுக் கொள்ளுகிறார்கள்.

9. கிராம உத்தியோகஸதர்கள் தாலூகா ஹெட்குவார்ட்டருக்கு வருங்காலத்திலும் ஜமாபந்தி காலங்களிலும் தங்குவதற்கும் ரிக்கார்ட்டுகளை பந்தோபஸதாய் வைத்துக் கொள்ளவும் தாலூகா கச்சேரிக்கு சமீபத்தில் ஒருகட்டிடம் கட்டிகொடுக்க வேணுமாயும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

10. பட்டா நிலங்களை சப் டிவிஷன் செய்வதற்காக ரயத்துகளிடம் வசூல்செய்து வரும் பீசு ரூ 2-யும் கரணம்களுக்கே கொடுக்க வேணுமாய் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

11. சர்வே ஆயுதங்களை வருஷம ஒருமுறை இன்ஸபெக்டிங் தாசில்தார் அவர்களும் ரிவினியூ இன்ஸபெக்டர் அவர்களும் சோதனை செய்து அவசியமான உத்திரவு பிறப்பித்து விடுகிறபடியால் ஜமாபந்தி செக்மிமோவில்சர்வே ஆயுதங்கள்

# ஆரம்பக்கல்வியின் தற்காலநிலை,

( தமிழ் மாணவன், சிதம்பரம். )

பல திங்களாக இவ்வாரம்ப கல்வியின் தற்காலநிலை யென்ற விஷயமாக ஆங்காங்கு சொற்பொழிவுகள் செய்யவேண்டு மென்ற வேணவாவுடையேனாக விருப்பினும் எதிர்பாராத சில அசௌகரியங்களால் இயலாமல் காலம் நீடித்துக் கொண்டு வருவதனால் தற்போது இவ்வரியவிஷயத்துக் குரிமைபூண்ட நமது கிராமானுகூலன் அனைவருக்கும் தெரிவிக்க மனமொருப்பட்டேன் தமிழ் மக்களாகியபெரியோர்களே! சகோதரர்களே! சற்றுப் பொறுமையோடு தாங்கள் சிறிது ஆராயப் புகுந்தால்உங்களுக்கும் இவ்விஷயம் விளக்கமற் போகாது. நிற்க, முன்னுரையாகச் சிலகூறி மேல் விரித்துரைக்கின்றேன். குற்றமுளதாயின் உலகம் பொறுக்க. இவ்வாரம்ப கல்வியானது முற்காலத்தில் நடைபெற்ற விதத்தைச் சிறிது ஆராய்வோம். நாலைந்து ஊர்களுக்கொரு திண்ணைப் பள்ளிக்கூடமுண்டு. 50 பிள்ளைகளுக்கு மேலிருப்பினும் உபாத்தியாயரொருவரேபடிப்பித்துவந்தார். அவ்வுபாத்தியாயரோ நம் நாடு சீரடைய வேண்டுமெனப் பாடுபடுபவராயிருந்தார். பிள்ளைகளுக்குச் சம்பளம் குறைவாயிருப்பினும் உபாத்தியாயருடைய வருமானம் அளவில்லாதது. பெற்றோர்களும் அவ்வுபாத்தியாயரை எவ்வகையிலும் வருத்தமுறாவண்ணம் ஓம்பிவந்தனர். உபாத்தியாயரோ தங்குடும்பக்கவலை சிறிதளவுமின்றித் தங்கணக்காயர் தொழிலைக் கணப்பொழுதும் குறைவில்லாது பார்த்து வந்தனர். அப்போது உபாத்தியாயரிடத்துள்ள மதிப்பு எண்ணிலாதது அவரையன்றி ஊரில் எக்கருமமும் நடைபெறாது இதற்கெல்லாம் காரணமின்னதென்பதைச் சகோதரர்களெல்லோரும் யோசித்துப் பார்க்கவேண்டியது ஆவசியகம். இப்பொழுதுள்ள நிலைமை போல "உபாத்திமைதொழி" லென்பது அக்காலத்தில்லை. தெய்வத்தோடொப்ப உபாத்தியாயரை மதித்து வந்தனர் உபாத்தியாயரும் பெற்றோரை உண்மையாக நேசித்துவந்தனர் எவ்வளவு பெரிய பணக்காரராயிருப்பினும் அவருடைய மக்கள் உபாத்தியாயர் ஏவுந்தொழில்களை விரும்பிச் செய்யவேண்டு மெனக் கடமை பூண்டொழுகினர் உபாத்தியாயருடைய நல்லிலக்கணங்களே இத்துணைப் பெருமைக்குங்காரணம். தற்போது மேலே சொன்னவண்ணமொழுகுபவர் நூற்றுக்கு இரண்டொருவர் கிடைப்பதுமரிது ஊராரும் தம்மூரில் உயர்ந்த நிலையில் பாடசாலையை வைத்து நடத்திப் புகழ்பெற வேண்டுமென ஒருங்கே எண்ணங் கொண்டிருந்தனர்,

"குலன் அருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம் மலை நிறைகோல் மலர் நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும்
அமைபவன் நூல் உரை ஆசிரியன்னே'; என்று

பெரியோர் வகுத்தவாறு ஆசிரியனானவன் சிறந்த வருணத்துட் பட்டவனாகவும், கருணையுடையவனாகவும், கடவுளிடத்து அன்புநிறைந்த ஆஸ்திக எண்ணம் நடை இவைகளை யுடைமையால் உண்டாகிய மேன்மையை யுடையவனாகவும், சிறந்த கல்வி கேள்வி யறிவொழுக்கங்களால் நிரம்பியவனாகவும், நிலம்போற் பொறுக்குந் தன்மையும் மலைபோல் யாவராலும் அறியப்படுந் தன்மையும் கலங்காத தன்மையும் தராசுக்கோல் போல நடுவு நிலைமையும் பூவையாவரும் விரும்பிக் கொள்வது போல்சனங்களால் விரும்பிக்கொள்ளப்படும் குணமும் உடையவனாக விருத்தலுடன் உலகநடையை யறிந்து அதற்கிணைய வொழுகுபவனாகவும் இருத்தல் வேண்டுமென வரம்பிட்டு வைத்தனர் இத்தகைய யோக்கியதா பத்திரமுடையவரிடத்தேதான், பெற்றோர் தாம் வருந்திப் பெற்ற தமதருமை மக்களை யடைக்கலமாகத் தந்து படிப்பிக்குமாறு செய்து வந்தனர். அத்தகைய நல்லாசிரியருக்கும் இப்போது அரசாங்க போதனாமுறைப் பாடசாலையில் யோக்கியதா பத்திரம் பெற்றுவரும் உபாத்தியாயர்களுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை நீங்களே அனுபவத்தில் அறிந்திருப்பீர்கள். உண்மையுபாத்தியாயருக்கும் 'குலத்தைகெடுக்கவந்த கோடாரிக்காம்புபோன்ற சில உபாத்தியாயர்களால் இழிவுண்டாகின்ற

சம்பந்தமான கேள்வியை எடுத்துவிடவேணுமாய் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

12. கிராம உத்தியோகஸ்தர்களுக்கு இதர சர்க்கார் உத்தியோகஸ்தர்களைப்போல் பிரிவிலேஜ் லீவ் கொடுக்கவேணுமாய் தீர்மானிக்கிறது.

13. சர்க்கார் விடுமுறை நாட்களில் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் கிராம உத்தியோகஸ்தர்களை (சிப்பந்திகள் உள்பட) கூப்பிட்டு யாதொருவித வேலைகளையும் வாங்கக்கூடாதென்றும் உத்திரவு செய்யவேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறது.

14. கிராம உத்தியோகஸ்தர்களில் கர்ணம்கள் வட்டத்திலேயே குடியிருக்க வேணுமென்கிற போர்டார் அவர்கள் புரோசிடிங்கை மாற்றி வட்டத்துக்கு 3 மைலுக்குள்பட்ட இடங்களில் குடியிருக்கலாமென்பதாய் உத்திரவு செய்ய வேணுமாய் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

15. கிராம உத்தியோகஸ்தர்களில் கர்ணம்கள் தங்களூருக்கு ஏற்படும் பல அசௌகரியங்களை முன்னிட்டு வேறு காலியாகும் வட்டங்களுக்கு தங்களை மாற்ற வேணுமாய் கேட்டுக் கொண்டால் அந்தப்படி மாற்றவேணுமாய் கேட்டுக் கொள்ளுகிறது.

16, சர்வே பரீக்ஷையில் தேறி காயமாய் வேலை பார்த்துவரும் கர்ணங்களை எக்காரணத்தை முன்னிட்டும் மறுமுறை சர்வே டிரயினிங்குக்கு அனுப்பிவரும் வழக்கத்தை ரத்து செய்ய வேணுமாய் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது,

17. கிராமங்களில் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் முகாம் செய்யும்போது தேவையான சாமான்கள் கிடைக்கக்கூடிய இடங்களில் கி. உ.க்களை சாமான்களை சப்ளை செய்யும்படி உத்திரவு செய்யக்கூடாதென்று B. S. O. 113 (பக்கம் 215-ல்) தெளிவாக உத்திரவாகியிருந்தும் சாமான்கள் வெகுவாக கிடைக்கக் கூடிய இடங்களிலும் ஷை உத்திரவுக்கு விரோதமாய் எல்லா உத்தியோகஸ்தர்களும் கி. உ.க்களை கொண்டே சப்ளை செய்யும்படி வற்புறுத்தி வருவதை ரத்து செய்யவேணுமாய் இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

18 கிராம முன்சீபுகளுக்கு தங்கள் கிராமத்தை விட்டு, வெளியே சர்க்கார் அலுவல்களுக்குக்காக போகும்போது 2 வது வகுப்பு பிரயாணப் படி கொடுத்து வந்ததை நிறுத்தாமல் மறுபடியும் அமுலுக்கு கொண்டுவரவேணுமாய் இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது

19, வட்டங்களை இணைத்த காலத்தில் வேலையிலிருந்து எடுபட்டுப்போன சிப்பந்திகளை மறுபடியும் நியமிக்கும்படி ரிவினியூ போர்டார் உத்திரவு செய்த பிரகாரம் அனுஷ்டானத்துக்கு கொண்டுவரவேணுமாய் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

20 கரணங்களுக்கு சப்ளை செய்திருக்கும் பிளான், பீல்டு மெஷர்மெண்டு புக் இவைகளை சர்க்கார் செலவிலேயே பைண்டு செய்து கொடுக்க வேணுமாய் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது

21. கவர்ன்மெண்டுக்குச் சொந்தமான புறம்போக்கு மரங்கள் திருட்டுப்போய் கண்டுபிடிக்க முடியாத கேசுகளில் ஏற்படும் மரக்கிரயத்தை கிராம உத்தியோகஸ்தர்களிடம் வசூல் செய்யும் வழக்கத்தை நிறுத்தவேணுமாய் இம் மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

22. ஜில்லா கெஜட்டு தமிழ் பிரதிகளை கிராம உத்தியோகஸ்தர்களுக்கு கட்டண மன்னிப்பில் சப்ளை செய்யும்படி இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

23. ஜங்கமஸ்தாவர ஜப்தி விஷயமான 3, 5, 7, நெ. நோட்டீசுகளை ரூலுக்கு விரோதமாய் கி. உ.க்களை கொண்டு தயாரிக்கும்படி நிர்ப்பந்தம் செய்யும் வழக்கத்தை நிறுத்திவிட வேணுமாய் இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

24, சாணமுக்குமாத்திரம் தாசில்தார் அவர்கள் அபராதம் விதிக்கலாமென்ற உத்திரவை ரத்து செய்யவேணுமாய் இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது,

25. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் கிராமங்களுக்கு முகாம் செய்யும் காலத்தில் குறைந்தது 2 தினத்திற்கு முன்பாகவே எழுத்து மூலமான உத்திரவு அனுப்பிவரவேணுமாய் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது

26. கிராம உத்தியோகஸ்தர்களை மரியா[illegible]யாய் நடத்திவரவேணுமென்று கவர்ன்மெண்டார் அவர்கள் உத்திரவு இருந்தும் (தண்டிக்கப்படும்) (சிக்ஷிக்கப்படும்) என்பதாய் உத்திரவில் எழுதிவருவதை நிறுத்தி மரியாதையாய் நடத்த வேணுமாய் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

கடைசி பக்கம் பார்க்க

தெனச் சிலர் கூறுவர். அவர் அறியாது கூறுகின்றனர் என்பதே பொருத்தமானது. அன்றோர்,

நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடுவானும்—நிலையினும்
மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான். எனமேலோர்

கூறிய விதத்தைச் சிறிது சிந்தித்துணரக் கடவர்.

இனித் தற்காலத்திலுள்ள உபாத்தியாயர்களைப் பற்றி யாராய்வோம் பெரும்பாலும் இவர்களில் நூற்றுக்கு இருபதுபேர்வரை ஆங்கிலத்தில் சிறிதுணர்ச்சி பெற்றவர்கள். (S.S.LC.) ஏனையோரிற் பலர் அதற்குக் கீழுள்ள வகுப்புகளிற் படித்தவராவர். இவர்களிடத்துப்பயிலும் மாணுக்கர்கள் 5-வது வகுப்புவரையில்தான், பயில்வார் இவ்வுபாத்தியாயர்களில் சில நக்குத்தமிழென்றால் தலைவலி ஆனல் ஆங்கிலமோ தப்புந்தவறுமாய்த் தண்ணீர்பட்டபாடு சங்கங்களிலும்வீடுகளிலும்பேசுவதெல்லாம் ஆங்கிலமே அவர்கள் தமிழ்நாடுஎன்பதையும் தாய்மொழி யின்னதென்பதையும் தன்னிலையையும் மறந்தவர்கள் இப்போதுதான ஐரோப்பா கண்டத்திலிருந்து வந்திறங்கிய ஆங்கிலேய கனவான் போன்று தாம் தமிழ்மக்கள் என்பதை அறவே மறந்துபேசுபவர்கள்; நடக்கின்றவர்கள். வாயில் புகையிலைச் சுருட்டு தலைமயிரோ பூச்சிவெட்டு, தின்பதோ புலாலுணவு உடையோ, மேனாட்டுடை- இரவில் நித்திரையோ இஷ்டமானவிடம் சொல்லுவதெல்லாம் மாறுபாடு இத்தகைய உபாத்திமார்களிடம் நம் பிள்ளைகளைக் கல்வி கற்க விடுவதால் எத்தகைய நல்லகடை படியும் என்பதை நேயரே சிந்தித்தறியுங்கள் ‘ஆத்திசூடியோ’ ‘ஆத்திச்சூடியோ’ எனப் புத்தகத்தின் பேரே தெரியாதவர் பலர். நூலிலுள்ள செய்யுட்களை இவர்கள் எவ்வாறு பயிற்றுவிக்க வல்லர் ஆவர். இச்சிறுநூல் இவ்வாறானல் மற்றைய நீதிநூல்களும், பிறவும் எவ்வாறு படிப்பிக்கப்படும். சில தற்கால வுபாத்திபாயர்களைக் கண்டு பேசியபோது ஆத்திசூடி 108 வரிகளையும் ஒரு வருஷத்தில் சொல்லித்தர முடியாதென்றார்கள். மேல் வகுப்புப்பாடந்தவிரக் கீழ்வகுப்புப் பாடங்களில் பழக்கம்வேண்டியதில்லை என்பர் சில தலைமையுபாத்தியாயர்கள். உதவியுபாத்தியாயரை விசாரித்தால்மேல்வகுப்புப் பாடம் தமக்குவேண்டியதில்லை தம் வகுப்புக்கு வேண்டிய பாடம் மட்டும் படித்தால் போதுமென்பர். இவர்கள் தம் கல்விப் பெருமைதான் என்னே! இவ்வளவு அருமை பெருமையுள்ள ஆசிரியர்களிடம் நமது அருமையான பிள்ளைகள் பயின்றால் நாமும்நமது சிறுவர்களும் என்றைக்கு அடிமைத் தன்மையிலிருந்து விடுபடுவோம். இப்போதுள்ள போதனுமுறைப்பயிற்சி பெற்றவர்களுக்கும் இனிப் பெறுபவர்களுக்கும் மதுரைத்தமிழ்ச் சங்கத்தாரால் நடத்தப் பெறும் பிரவேச வகுப்புக்குள்ள பரீட்சையாவது பொதுக்கல்விப் பரீட்சையாக அமைத்தால்தான் 5-வது வகுப்புவரை கற்பிக்க அவர்கள் அருகராவார்கள். இன்றேல் இத்தகைய கல்வியாளரிடம் பயிலுவதைவிடப் படியாதவராகஇருப்பதேநலம். அவர்களும் நல்லொழுக்க முடையவராக இருத்தல் நன்றாகும்.

பாடசாலைகளில் இப்போதுள்ள பாடங்களில் சிலவற்றைத் திருத்தியமைத்தல் வேண்டும் நாவலராவர்களால் எழுதப்பட்ட பாலபாடங்களும், சமயநூல்களும், படங்களாக அமைத்தல் வேண்டும். இளமையிலேயே அதாவது 4, 5-வது வகுப்புகளிலிருந்தே இலக்கணவினவிடை, இலக்கணச்சுருக்கம், நன்னூல் மூலம் முதலிய இலக்கண நூல்கள் கற்பிக்கப்பட வேண்டும். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி நன்னெறி, வெற்றிவேற்கை, ஆசாரக்கோவை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, முதலிய நீதி நூல்களை ஐந்தாம் வகுப்பு முடிவதற்குள் கற்பிக்கவேண்டும். பெரியபுராணவசனம், திருவிளையாடற் புராணவசனம் இவைகளின் சுருக்கங்களையும் நேர்ந்தபோது படிப்பித்துப்பிரசங்கங்கள் செய்விக்கவேண்டும் உபாத்தியாயர்களும் இவைகளை ஐயமறக் கற்பிக்குந் திறமை யில்லாதவராயிருப்பினும் விரைவில் தக்கபாண்டியத்தியம் பெற வேண்டுமென விதிகள் அமைக்கப் பெறுதல் வேண்டும். நம்நாடு இனிச் சீர்பெறவேண்டியது நம்மிடத்தில்தான் இருக்கிறது. ஆரம்ப பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வி கட்டாய பாடமாக ஏற்படுத்தப்படவில்லை யென்பது எல்லா வுபாத்திமார்களுக்கும், பெற்றோர்களுக்கும், தெரிந்திருப்பினும் இப்பொழுதும் ஞாபகப் படுத்துகிறேன், போதனுமுறைப் பாடசாலைகளில் தேர்ச்சி பெறுவது மட்டும் போதாது, இவ்வுபாத்திமார்களை வைத்து நடத்தும் அதிகாரிகள் ஆங்கிலக் கல்வி மட்டும் பயின்று பெரிய பட்டங்கள் பெறுவதால் பயன் இல்லை யென்பதைத் துணிந்தே



கூறலாம். அவர்களும் தமிழறிவு மிகுதியாகப் பெற்றிருத்தல் வேண்டும். தற்போது ஊர்தோறும் பள்ளிக்கூடங்கள் ஒருங்கே தோன்றியிருப்பினும் நூற்றுக்குப்பத்திலாவது தாய்மொழி யபிவிருத்தி செய்யப் பட்டுவரவில்லை. அரசாங்கத்தார் தரும் தொகை கல்வியை வளர்க்கப் போதாது’ என்று குறை கூறுவார்பலர். போதுமெனத் துணிந்து நான் கூறுவேன் எவ்வாறெனில் முற்காலத்தைப் போல 4, 5 ஊர்களுக்கு மத்தியில் ஒருபாடசாலை நல்லதாக நடந்தாலும் போதுமே பள்ளிக்கூடம் எண்ணிக்கையில் அதிகம் வேண்டாம். 3 பேர் வேலைசெய்யும் பாடசாலையில் 2 பேருக்கு அந்தத் தொகையைப் பங்கிட்டுத் தமிழறிவு மிக்க வரை ஏற்படுத்தலாமே. 10 பேர் 14 பேர் வேலைசெய்யும் ஆரம்ப பாடசாலையில் பாதிக்கு மேலாவது நல்ல உபாத்தியாயர்களை ஏற்படுத்தலாகாதா? அரசாங்கத்தார் தரும் தொகையை நல்ல வழியில் செலவுசெய்யத் தெரியாமல் பணம் போதாதென்று கூறுவது நல்லதாகாது (S. S. L. C.) நேஷனல் கலாசாலை விடுமுறை பத்திரம் பெற்றுப் போதனுமுறை பயின்றவராயினும் பிரவேச பரீட்சையில் தேர்ச்சி பெறுதல் ஆவசியகம். ஆரம்ப பாடசாலை யுபாத்தியாயாகிய எவரும் இப் பரீட்சை தேறியே தீரவேண்டும் இல்லாவிடின் 5-வது வகுப்புவரை படிப்பிக்கச்சிறிதும் முடியாதென்றே சொல்லலாம்.

இனி, ஜில்லா தாலுகா நாட்டாண்மைக் கழக உறுப்பினர்களும், நகர பரிபாலன சபை யுறுப்பினர்களும் படித்தவர்களாகவும், செல்வர்களாகவுமிருத்தல் ஆவசியகம். இவ்வுறுப்பினர் தக்க கல்வி யறிவுள்ளவராயிருந்தால் தான் நல்லமுறையில் கல்வியை வளர்ப்பார்கள். நம் நாட்டுக் கல்வியை வளர்ப்பதற்குத் தமிழ்ப் பற்றுள்ளவர்களாகவும், சமயப் பற்றுள்ளவர்களாகவும் உள்ளவர்களையே உறுப்பினராகத் தேர்ந்தெடுக்க வேண்டும். நடுவு நிலைமை குன்றாமல் நாட்டிற்கு நன்மைசெய்யக் கூடியவர்களையே பரிசோதித்துத் தேர்தல் செய்ய வேண்டும் அவ்வாறின்றிச் சில பற்றுகளால் தேர்தல் செய்துவிட்டுப் பின் கஷ்டமும் நஷ்டமும் அடைவதையே நம் நாடு இயல்பாகச் சில ஆண்டுகளாகக் கொண்டிருக்கிறது. இந்தச் செயல்களை நம்நாடு அடியோடு விட்டுவிடவேண்டும் நம்மனோர்

“எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு” என்றதிருக்குறளை

பலமுறையும் சிந்திக்கவேண்டும்கிராமபஞ்சாயத்து மன்ற வுறுப்பினர்களும், தாலுகா ஜில்லா நாட்டாண்மைக் கழக வுறுப்பினர்களும், நகரபரிபாலன சபையுறுப்பினர்களும் நாலடியார். குறள், முதலிய நீதிநூல்களை நன்கு கற்று அறிந்தவராயிருத்தல் வேண்டும். நீதிநூல் வல்லவர்களையே இக்கழகங்களுக்கு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுத்தல் அவசியம் பொதுவாகத் தமிழ்மக்களனைவரும் நாலடியார் திருக்குறள் ஆகிய இவ்விரு நூல்களையேனும் நன்றாகக் கற்றுத்தேர்தல் வேண்டும், இவ்வாறு தற்காலத்திலுள்ள தமிழ்மக்கட் பகுதியார் பண்டைத் தமிழ்ப் பெருமக்களால் ஏற்படுத்தப்பட்ட நீதிநூல்களையும். ஒழுக்க நூல்களையும், பொருள் நூல்களையும், இன்பநூல்களையும் வீட்டு நூல்களையும், நன்கு சிறிது சிறிதாக கற்றுவந்தால் விரைவில் நம்நாடு முன்னேற்றமடையும், கையெழுத்துப்போடும் படிப்பாவது அல்லது ஊழியஞ்செய்யும் படிப்பாவது படிப்பதால் சிறிதும் பயனில்லை. ஐந்தாவது ஆறாவது வகுப்புவரை படித்து விடுவதால் பிரயோசனம் சிறிதுமின்று. தமிழ், சம்ஸ்கிருதமுதலிய கல்விகளில் தக்க பாண்டித்திய மடையச்சுமார் 10 வருஷங்களாவது பிடிக்கும். எடுத்த புத்தகத்தைப் படிப்பதுமட்டும் படித்ததாகாது. அவற்றிற்கூறிய பொருள்களை இயன்ற மட்டும் தெரிந்து கொள்ள வேண்டும். பெற்றோர்கள் படித்தவராயிருந்தால் தான் பிள்ளைகள்பெரும்பாலும் படித்துத்தேர்ச்சி பெறுவர். ஆதலால் இனியாவது சகோதரர்களே! சகோதரிகளே! நீங்கள் அருமையாகத்தவங்கிடந்து பெற்ற பிள்ளைகளை நல்லாசிரியரை யடுத்துக் கல்வி கற்குமாறு செய்து அடிமைத்தனத்திலிருந்துநீங்க முயற்சி செய்வீர்களென நமது நடராஜப் பெருமான் குஞ்சிதபாதத்தை மனமொழி மெய்களால் சிந்தித்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

“பண்டைத்தமிழரின்மேம்பாடு” என்றபொருள் பற்றி யெழுதும் ஆசிரியர் பண்டைத்தமிழ் நூல்களை நன்கு ஆராய்ந்து எழுதுகிறார்களாகலின் அவ்விஷயங்களைப்பன்முறை படித்துத்தற்கால நாகரீக வுணர்ச்சியை விடுத்துப் பண்டைய முறைகளைக் கைப்பற்றுவோமாக.

---

அன்பர்களே!

இரண்டாவதாண்டு முடிந்துவிட்டபடியால் சந்தா பாக்கியை உடனே மணியார்டர்செய்தும், வி. பி யை திருப்பாது பெ[illegible] ஆதரிக்க வேண்டுகிறோம்[illegible]

# கிராம சுகாதார வார விழா.

## ஆலங்குடி.

ஆலங்குடி லோகல்பண்டு சத்திரத்தில் பாபநாசம் தாலுகா நாட்டாண்மைக் கழகத்துத் தலைவராகிய உபர் செல்வத்திருவாளர் பூண்டி அ. வீரையா வாண்டையாரவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. அவ்வமயம் தாலுகாவின் பல பகுதிகளினின்றும் சுமார் 500 ஜனங்களுக்கு மேல் வந்து குழுமியிருந்தனர். தலைவரவர்கட்கு ஆலங்குடி திராவிடசாஸ்திர ஆரம்பபாடசாலையாரால் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்து அன்புடன் அளிக்கப்பட்டது அதன்பின் தலைவரவர்கள் முன்னுரையாகச் சில செய்திகள் விழுமிதாகச் சொன்னார்கள் வலங்கைமான் நாட்டாண்மைக் கழகப் பெண்பாடசாலை மாணவிகளால் வந்தனைப் பாட்டுகள் கும்மி, கோலாட்டம் ஆகிய இருவகையினாலும் கூறப்பட்டன. அதன்பின் 'சுகாதார'த் தைப்பற்றி ஆலங்குடி பாடசாலை மாணவர்களால் திறம்பெற இலக்கண அமைதியுடன் ஒருநாடகம் நடித்துக் காட்டப்பட்டது. பாபநாசம் தாலுகா 'ஹெல்த்இன்ஸ்பெக்டர்' அவர்களால் மின்சார விளக்கின் உதவிகொண்டு அம்மை முதலிய தொத்து வியாதிகளைப் பற்றிய விரிவுரையொன்று நிகழ்த்தப்பட்டது அதன்பின் வலங்கைமான் மருத்துவசாலை மருத்துவ அறிஞர் சுகாதார விஷயமான பல செய்திகளை யருமையுடன் எடுத்து விரித் துரைத்தார்கள். இறுதியில் தலைவரவர்கள் இங்குக்குழுமிய தின் காரணமின்னதென்பதை நீங்களறிந்துஉங்கள் அன்பர்களுக்குஞ் சொல்லி நம்மால் எவ்வளவுவரை நோயுண்டாகாமல் பாதுகாக்க முடியுமோ அவ்வளவு தூரம் பாதுகாக்கவேண்டும். இதனாலேயே நமது ஔவைப்பிராட்டியார் 'நோய்க்கிடங்கொடேல்' எனச் சிறுவயதிலேயே நாம் அறிந்து இன்புறுமாறு சொல்லியுள்ளார் எனப் பல எடுத்துக் காட்டுக்களால் விளக்கி யருளினார்கள். இனி, இச் சிறு கிராமத்தில் இவ்வளவு தூரம் இவ்விழாவைக் கொண்டாடப் படுமென்பதை யான் எதிர் பார்க்கவேயில்லையென்றும். இதுவரை நடந்த சுகாதாரக் கொண்டாட்டங்கள் இதைப்போல மேன்மையான நிலையில எங்கும் நடைபெற வில்லையென்றும் பாராட்டிக் கூறினார்கள். மற்றும், இன்று இச் சபையில்சுகாதார விஷயங்களை யாவரும்எளிதில் உணருமாறு நன்கு நடித்துக்காட்டிய இவ்வூர்ப் பாடசாலைப் பிள்ளைகள் பேசும் சொற்களின இலக்கண வழுவின் மையையும் அவர் சுறுசுறுப்பையும் பார்க்கும் போதே இப்பாடசாலை யுபாத்தியாயர்களின் கல்விப்பெருக்கத்தையும், போதனையின் திறனையும் எடுத்துக் கூறுதல் மிகையாகுமென்றும் இப்பாடசாலையை மாதிரியாகக்கொண்டு யாவரும் படிப்பிப்பார்களாயின் 'தமிழ்நாடு' எளிதில் நம் கைக்கு வருவதாகும் என்றும், இப்பாடசாலையின் முன்னேற்றங்கருதி எல்லா ஜனசமூகத்தாரும் வேண்டிய உதவிசெய்யவேண்டு மென்றும் தற்காலத்தில் இத்தகைய பாடசாலைபோல எங்குங் காண்ப தரிதெனவுங் கூறி முடித்தார்கள்.

அதன்பின் நாடகம் நடித்துக்காட்டிய மாணவர்கட்கும், விளையாட்டிற்றேறிய மாணவர்சட்கும் சிற்றுண்டிகளும், பரிசுகளும் தலைவரவர்கள் வழங்கினார்கள். மேலமாபதி திரு— சோமசுந்தரக் கொட்டையுண்டாரவர்கள் நாடகம் நடித்துக்காட்டிய தமிழ் மாணவர்கட்கு "நன்னூல்" மூலம் பரிசாக வழங்கிய பான்மை யாவராலும் மிகப் பாராட்டற்பாலது. அதற்குப்பிறகு தலைவரவர்களுக்கும், வந்திருந்த சபையோர்களுக்கும், தாலுகா நாட்டாண்மைக்கழக வுறுப்பினர்களுக்கும்,பாடசாலைபாத்தியாயர் திருகிருஷ்ணசாமியவர்களால் பெரியதோர் வந்தனோபசாரம கூறப்பட்டுச் சந்தனம் மாலை, தாம்பூலாதிகள் வழங்கி அன்றிரவு 9 மணிக்குச் சபை நிறை வெய்தியது. இவ்விழாவை இச்சிறப்புடன் நடத்த வேண்டுமெனக் கண்ணுங் கருத்து மாயிருந்து "மெய் வருத்தம் பாரார் பசி நோக்கார் கண்துஞ்சார்,— எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்— செவ்வி, அருமையு மபாரார்" ஆகி நின்று முற்று வித்துப் பெரும் புகழ்பெற்ற மேலமாபதி செல்வத் திருவாளர் உ. வச்சிரவேற் கொட்டை யுண்டாரவர்கள் செய்தியை நினைக்குந்தோறும் உளமகிழ்கின்றது. ஆலங்குடி பாடசாலை மானேஜர் மகா-ா-ா-ஸ்ரீ T. A. சபாபதி பிள்ளையவர்களுக்கு கனம் வாண்டையாரவர்கள் தமகருமைக் கரத்தால் பூமாலை சூட்டித் தமதன்பின் மிகுதியைப் பாராட்டிக் கூறினார்கள்.

கண்டுமகிழ்ந்தோன்.



யை ஒப்புவித்துச்சரிவர நடந்துவருமாறு செய்ய வேண்டுவது அவர்களின் கடமையாகும் எக்காரணத்தாலோ அங்ஙனம் செய்வதில்லை. பஞ்சாயத்தின் நிர்வாகத்தைப் புகழத்தக்க விதமாய் நடத்திவரும்பிரசிடெண்டுகள் இருக்கிறார்களென்பதும் தெரியாமலில்லை. ஆனால் மேற்கூறிய எனது கூற்றுகளுக்கிலக்காயுள்ள பிரசிடெண்டுகள் இனியேனும் தங்கள் தவறையுணர்ந்து புத்தகசாலைகளைக்கிராமத்தார் நன்கு உபயோகிக்குமாறு ஏற்பாடுசெய்து அவர்களின் கல்வியறிவைப் பெருக்கும்படி இதன்மூலம் பன்முறை வேண்டுகிறேன்.

### வாசக சாலைகள்,

கல்வியறிவைப் பெருக்குவதில் புத்தகசாலைகளுக்கிரண்டாவது வாசகசாலைகளாகும் ஆதலின் ஒவ்வொரு புத்தகசாலையுடனும் வாசகசாலை ஒன்றமைந்திருக்க வேண்டுவதவசியம். மாத, வார, தினசரிப் பத்திரிகைகளை வரவழைத்துப் பலரும் வாசிக்குமாறு செய்யவேண்டும். நாட்டின் க்ஷேமத்திற்கும் முன்னேற்றத்திற்கும் கருவிபோலுள்ளது பத்திரிகைகள். ஒரு அறிவாளி தான் அறிவிக்கக்கருதும் பொது விஷயத்தைப் பலவிடங்களிலுள்ள பல்லாயிரம் பேருக்கு ஏககாலத்தில் பத்திரிகைமூலம் அறிவிக்கலாம். இவ்விஷயத்தை பிரசங்க வாயிலாகக் கேட்பதாயின் ஓரிடத்துள்ளோர் அதுவும் ஒரேதடவைதான் கேட்க முடியும் பத்திரிகைமூலம் வெளியாயின் பலவிடத்துள்ள பல்லாயிரம் பேரும் தங்கட்கு அவகாசப்படும்போதெல்லாம் பல முறை படித்தறியலாம்.

பத்திரிகை சகலகலா வல்லவரான இரு ஆசானுக்குச் சமானமானது. ஒவ்வொரு சாத்திரத்திலும் விற்பத்தி யுடையவர்கள், அந்தசாத்திரத்திலுள்ள முக்கியமான விஷயங்களைப் பத்திரிகைகளின் வாயிலாகப் போதிக்கிறார்கள், ஒருவன் ஒரு நூலைப்பன்னாள் பன்முறை வாசித்தபின் ஒன்று திரட்டி உணரவேண்டிய அதன் கருத்தை பத்திரிகை சமைத்த உணவுபோல் ஏககாலத்தில்ஊட்டுகிறது.

பத்திரிகைகளினால் தேச மாகாண சட்டசபைகளின் நடவடிக்கைகளும் அரசியல் விஷயங்களும் தெரிகின்றன, இப்படியாக இருந்த இடத்திலிருந்துக்கொண்டே வாசகசாலையினுதவியால் அறிவை, விருத்திசெய்து கொள்வதோடு உலக நடப்புகளையும் அவ்வப் பொழுது தெரிந்துகொள்ளுகிறோம்,

முடிவாக எல்லாப் பஞ்சாயத்துகளையும் வேண்டுவது யாதெனில் புத்தகசாலையும் புத்தகசாலை இருப்பின் அதையொட்டி ஓர் வாசகசாலையையும் நிறுவி கிராம வாசிகளிடை பரவியிருக்கும் அஞ்ஞானம் என்னும் அந்தகாரத்தைக் கல்வி யென்னும் சூரியனொளியால் ஒழிக்க வேண்டுமென்பதே. எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் புரிவானாக. பரவு பஞ்சாயத்தின் பெருமபுகழே.

## தஞ்சாவூர் தாலூகா கி. உ. சங்கம்.

கிராம உத்தியோகஸ்தர்களின் சம்பளம் படி முதலிய உரிமைகளைப்பற்றி சென்ற 21-2-29ல் மேன்மைதங்கிய சென்னை கவர்னர் துரையவர்களிடம் டெபுடேஷன் மூலியம் தெருவித்தும் நாளது வரையிலும் யாதொரு குறைகளும் நீங்கியபாடில்லை, சென்ற மார்ச்சுமாதத்தில் சென்னை சட்டசபையில் நடந்த பட்ஜட்டு மீட்டிங்கில் கி. உக்களுக்கு படி கொடுக்கும் விஷயமாய் பிரஸ்தாபிக்கப்பட்ட காலத்தில் [கி. உக்கள் தங்கள் குறைகளை தெரிவித்துக்கொள்ளவில்லையே] என்பதாய் பதிலளித்து விட்டார்கள், என்னபாடுபட்டபோதிலும் கி உக்களின் குறைகள் நீங்கியபாடில்லை நாளுக்குநாள் கஷ்டமும் செலவும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஜமாபந்தியில் விசேஷகஷ்டமிருப்பதாய் தெரிந்துஒரே ஜமாபந்தியாக தாலுகா, ஹெட்குவார்டரிலேயே நடத்தும்படி உத்தரவு செய்தும் கஷ்டமும் செலவும் அதிகரித்துவிட்டது. ஆனால், ஜமாபந்திக்காக வெளியூர்களுக்கு முகாம்போகும் உத்தியோகஸ்தர்களின் படிச்செலவில்லாமல் போய்விட்டது டி செலவை கி. உக்கள் தாங்கள் செய்துகொண்டு தாலூகா ஹெட்குவார்டரில் சுமார் 2, 3, வாரங்கள் தங்கியிருந்து ஜமாபந்தியை முடித்துக்கொண்டு கிராமங்களுக்கு திரும்பிப்போகும்படியாகிவிட்டது இந்த தாலூகா கி. உக்கள் ஒவ்வொருவரும் சென்ற 4-5 பசலிகளாக தலா ரூ 35க்கு குறையாமல் செலவு செய்ததில் பசலி ஒன்றுக்கு தாலூகா மொத்தத்திற்கு ரூ 10000-க்கு குறையாமல் செலவாயிருக்கிறதாக தெரிகிறது இவ்வளவு செலவு செய்தும் கி உக்களால் எதிர்பார்க்கப்பட்டிருந்த படி ரூ 10 இன்னும் சாங்கிஷனாகவில்லை கி. உக்களுக்கு மாதச் சம்பளம் ரூ 13. 14 ஏற்பட்டிருப்பதில் டி தொகைபூராவும் தாங்களே அடையக்கூடாமல் ஜமாபந்தியில் செலவில் மாதம் ஒன்றுக்கு ரூ 3 வீதம் குறைந்து போகிறது.

# தஞ்சாவூர் ஜில்லா கி. உ. மகாநாடு.

சென்ற 1929-ஆம் வருஷத்தில் கிராம உத்தியோகஸ்தர்கள் தங்களுக்கு சம்பளம் ரூ. 30 கொடுக்க வேண்டுமென்று ஆங்காங்கு சங்கங்கள் ஸ்தாபித்துக்கொண்டு சங்கங்களின் மூலியமாய் கெவர்ண்மெண்டாரவர்களுக்கு மகஜர்கள் அனுப்பியதின் பேரிலும் ஜில்லாக்கள் தோறும் மகாநாடுகள் கூடி தீர்மானங்களை கவர்ண்மெண்டாரவர்களுக்கு அனுப்பி மேன்மைதங்கிய கவர்னர் பெருமானை டெபுடேஷன் மூலியமாய் பேட்டி கண்டதின் பேரிலும் கர்ணங்களுக்கு மாதச்சம்பளம் ரூ. 15-ம் சிப்பந்திகளுக்கு ரூ. 8-ம் வருஷம் ஒன்றுக்கு ஜமாபந்தி அலவன்ஸ என பத்தாய் ரூ. 10-ம் கி. உக்களுக்கும், சிப்பந்திகளுக்கு ரூ 2—8—0யும் சாங்க்ஷன் செய்யப்பட்டது சிறிது காலத்திற்கு பிறகு கிராமமுன்சீபுகளுக்கு மாதச்சம்பளம் ரூ. 15 சாங்க்ஷன் செய்யப்பட்டது ஆனால் ஜமாபந்தி அலவன்ஸை ரூ. 5 ஆக குறைத்து விட்டார்கள். மேலே கண்ட சம்பளதிட்டம் முற்றிலும் போதாதென்று ஆட்சேபித்துக்கொண்டிருக்கும் நிலைமையில் இந்த ஜில்லா செட்டில்மெண்டு முடிந்ததிலிருந்து வட்டங்களை இணைக்க ஏற்பாடு செய்யலாயிற்று அதிலிருந்து அனேக கி. உக்களும சிப்பந்திகளும் வேலையினின்று நீக்கப்பட்டார்கள். வேலை இழந்த கி. உக்கள் செய்த பலத்த கிளர்ச்சியில் இணைத்த வட்டங்களை மறுபடியும் பிரித்து வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் மறுபடியும் நியமிக்கப்பட்டார்கள் இணைத்த வட்டங்களை பிரிக்கும் காலத்தில் கி. உக்களின் சம்பள விஷயமாய் பரிசீலனை செய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. ஷை கமிட்டியாரின் சிபார்சுப்படி கர்ணங்களுக்கு ரூ. 1-ம் கி. முக்களுக்கு ரூ 2-ம் சிப்பந்திகளுக்கு அணா 8 ம் குறைக்கப்பட்டதுடன் கி. உக்களுடைய ஜமாபந்தி அலவன்ஸையும் நிறுத்திவிட்டார்கள். கி. உக்களுக்கு மாதச்சம்பளம் ரூ. 15 முற்றிலும் போதாதென்றும் அவர்கள் கோரியபடி ரூ. 30 கொடுக்கவேண்டுமென்றும் முறையிட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில் இருந்த சம்பளத்தை குறைத்து விட்டதானது எக்காரணம் பற்றியோ தெரியவில்லை.

ஆனால் இது விஷயமாய் பரிசீலனை செய்ததில் இணைத்த வட்டங்களை பிரித்து விடுவதற்காக கி. உக்களின் சம்பளம் குறைக்கப்பட்டதாக சொல்லுகிறார்கள் சம்பளவுயர்வு கொடுத்தகாலத்தில் வட்டங்களை இணைக்கும் உத்தேசத்துடன் கொடுக்கப்படவில்லை. அப்படிக்கிருக்க இணைத்த வட்டங்களை பிரிக்கும் காலத்தில் ஷை யார்களின் சம்பளத்தை குறைக்க நியாயமில்லை சர்காரில் எந்த டிபார்ட்மெண்டிலும் ஒரு முறை உயர்த்தப்பட்ட சம்பளத்தை எக்காரணத்தை முன்னிட்டும் குறைத்து விடுவது வழக்கமில்லை ஆனால் ஷை முறை கி. உக்களின் பால்கையாடப்பட்டது அவர்களின் துரதிர்ஷ்டமே.

குறைந்த சம்பளத்தையும் ஜமாபந்தி அலவன்ஸையுமாவது தற்காலம் சாங்க்ஷன் செய்ய வேண்டுமாய் சென்னை சட்டசபையிலும் தீர்மானிக்கப்பட்டது மேன்மை தங்கிய கவர்னர் பெருமானிடம் டெபுடேஷன் போனதிலும் (கி. உக்களுடைய குறைகளை கவனித்து பரிகாரம் செய்வதாகவும்) வாக்களித்திருக்கிறார்கள்,

சென்னை கெவர்ண்மெண்டாரவர்கள் கி. உக்களுக்கு வாக்களித்தபடி நாளது வரையில் யாதொரு பரிகாரமும் கிடைக்காததினாலும் மறுமுறையும் இந்த ஜில்லா கி. உக்களின் குறைகளை தெரிவித்துக்கொள்ளும் பொருட்டு நாளது அக்டோபர்மீ 13உ ஞாயிற்றுக்கிழமை தஞ்சை மானோஜியப்பா தெரு. ஷண்முக வித்தியாசாலையில், ஒரு கான்பரஸ் கூட்ட உத்தேசிக்கப் பட்டிருக்கிறபடியால், ஷை கான்பரன்ஸுக்கு இந்த ஜில்லா கி. உக்கள் ஒவ்வொருவரும் தவறாமல் விஜயம் செய்து தங்கள் குறைகளை தெரிவித்து தீர்மானங்களை நிறைவேற்றுவார்களென்று நம்புகிறேன்.

ஆகையால் மேலே கண்டிருக்கிறபடி விஷயங்களையும், சம்பளவுயர்வு முதலிய குறைகளையும் காருண்ய கெவர்ண்மெண்டாரவர்களுக்கு மறுமுறையும் எடுத்துக்கூறவும் இன்னும் இதர குறைகளைப் பற்றி முடிவுசெய்து தீர்மானிக்கவும் நாளது வருஷம் அக்டோபர் மாதத்தில் ஒரு ஜில்லா கான்பரன்ஸ் நடத்த தீர்மானிக்கப்பட்டிருக்கிறபடியால் இந்த தாலூகா கி. உக்கள் தங்கள் சந்தா தொகைகளை ஜில்லா தக்கடைசிக்குள் கொடுத்துதவுவதுடன் ஷை கான்பரன்ஸுக்கு ஆஜராகி தங்களுடைய குறைகளை தெரிவித்துக்கொள்ளுவார்களென்று நம்புகிறோம். கான்பரன்ஸ் கூடும் தேதி இடம் பின் வெளிவரும்.

R, அண்ணாசாமி அய்யங்கார் பிரசிடெண்டு,

13—10—29உ. காலை 7 மணி முதல் 10 வரை தஞ்சை ஜில்லா சங்க மீட்டிங்கும் சப்ஜக்டு கமிட்டி மீடிங்கும் 13—10—29உ காலை 11 மணி முதல் 5 மணி வரை கான்பரன்ஸ் தீர்மானங்கள்

இப்படிக்கு.

**S. Sivaboga Mudaliar,**
President,
Reception Committee.


## விளம்பரம்.

த, ச. சுப்பராயலுசெட்டி & பிரதர்ஸ்

ஜவுளி, பித்தளை, வெள்ளிப்பாத்திரங்கள்,

ஷுறுப் வியாபாரம், மன்னார்குடி.

# ராணா பிரதாபசிம்மன்.

## அல்லது

## "ராஜபுத்திர தேச பக்தி."

[ஸ்ரீமான் S. மஹாலிங்க சர்மா சிறைவாஸத்தில் எழுதியது.]

(All Rights Reserved,)

[233-வது பக்கம் தொடர்ச்சி.]

*அக்பர்:*— தாங்கள் கூறியவிஷயங்களை கவனத்துடன் கேட்டேன் எந்த சுயமரியாதையுள்ள மனிதனும் தாங்கள் கூறிய சந்தர்ப்பங்களில் தன்னை மீறிக் கோப மடைவது இயற்கையே. மீவாரத்தைப்பற்றி நான் கொண்டுள்ள நோக்கத்தை ராஜாமானசிம்மர் சிலதினங்களில் தங்களிடம் கூறுவார். பிரதாபசிம்மனை அடக்கிவிட யானும் பெருமுயற்சி செய்துகொண்டுதான் வருகிறேன். வங்காளத்தில் ஏற்பட்ட சில சச்சரவுகளினாலும், நமது சேனைகள் சில மாதங்களாகப் பெரிதும் கஷ்டப்பட்டன. இப்பொழுது எல்லாம் வெற்றிகரமாகமாறி சேனைகள் தலைநகரம் திரும்பிக்கொண்டிருக்கின்றன. மீவாரத்துடன் நாம் ஆரம்பிக்கும்சண்டை முக்கியமாய் ராணாபிரதாபசிம்மனை ஒழிப்பதற்கும் இரண்டாம் பக்ஷமாக மீவாரத்தைக் கவிழ்ப்பதற்கும் செய்யப்படுமென்று இன்று நான் தங்களுக்கு உறுதி கூறுகிறேன். தங்களுடைய மனதில் எந்த சஞ்சலமுமில்லாமல் நடக்கும் ஏற்பாடுகளை கவனித்துக் கொண்டு தங்களுடைய விடுதியில் இருந்துகொண்டிருங்கள். குறித்த காலத்திலே தகுந்த சமயத்தில் புறப்பட்டுச் சென்று கொண்ட நோக்கத்தை ஈடேற்றுவோம் கடவுள் நமக்குத் துணைசெய்வார்.

*சக்தன்:*— தாங்கள் கூறியவார்த்தைகளால் நான் பெரிதும் மனமகிழ்ச்சிகொண்டேன். தங்களிடமிருந்து நான் எதிர் பார்த்தபடியே செய்தீர்கள். எல்லாவற்றிற்கும் நான் இன்றுபோய் நாளை சகரசேனனுடன் இங்குவந்து தங்களைக் காண்கிறேன். தாங்களும் அதற்குள் ராஜா மானசிம்மர் முதலியவர்களுடன் யோசித்து இனிச் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைக் குறித்து திட்டம் செய்யுங்கள் யான் சென்று வருகிறேன். வந்தனம். என்று கூறிக்கொண்டே சக்தி சிம்மன் பாதுஷாவினிடம் விடைபெற்றுத்தன் விடுதியை அடைந்தான்.

### எட்டாவது அத்தியாயம்.

நாம் இப்பொழுது மறுபடியும் மீவாரத்துக்குத் திரும்புகிறோம். மீவாரநாட்டின் தலைப்ப[illegible] தோன்றி கோல் கைக்கொண்ட சொற்றனுகிய [illegible]தாபசிம்மன் அரியணையில் ஏறி ஆறுவருடமாயின. இந்த ஆறு வருடத்திற்குள்ளாக ராஜபுதனத்தில் பெருத்த மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன. அம்மாறுதல்களின் பயனாக, பேபரின் சந்ததியார் பெருத்தோர் செல்வாக்கை இந்துஸ்தானத்தில் நிலை நாட்டுவதற்கும் பரம்பரை வீரர்களும் தேசாபிமானிகளுமான ராஜபுத்திரர்கள் அக்பருடைய மாய தந்திர வலையில் சிக்கி மதியிழப்பதற்கும் வசதி ஏற்பட்டது. குலப்பெருமையை உயிர்நிலையெனக்கொண்ட குடிமக்கள் பலர் துரதிஷ்ட வசத்தினால் ஆடம்பரப் பிரியராகமாறி அறிவிழந்து அக்பரின் கீழ் பணிசெய்ய உடன்பட்டனர். தேசம் சுபீக்ஷமான நிலைமையிலிருந்த காலத்து பெருவாழ்வு வாழ்ந்து பெருமையுடன்களித்த குடிமக்கள் அத்தேசத்தின் அவ்வுயர்நிலைமாறி துக்கம் ஏற்பட்ட காலத்து மனம் தளர்ந்து, மானத்தைத்துறந்து அன்னியருக்கு ஆட்பட்டு வயிறு வளர்ப்பது மிக வெறுக்கத்தக்கதல்லவா?

ராஜஸ்தானத்தில் சிற்றரசர்கள் தாமாகவே மோகம் கொண்டு மொகலாய ஆஷியைத் தாங்கிநிற்க முற்பட்டுவிடவில்லை. உண்மையாகவே தேசத்தில் ஓர் பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டுவிட்டது. மொகலாய வம்சத்தில் மற்றவர்களைப்போல் அல்லாமல் அக்பர் இணையற்ற தந்திரசாலியாக விளங்கி ராஜஸ்தானத்தை சீர்குலைத்து வந்தார் தன் இஷ்டத்திற்கு விரோதமாக நின்ற சிற்றரசர்களை ஓரிடத்தே தன் சேனைகளைக்கொண்டு தாக்கியும், அது முடியாமல் போனவிடத்து தன்னுடைய மாயா ஜாலங்களை அனுசரித்து மகிழ்வுடன்பேசி மாண்புகள் பல அளித்து திறமையுடன் தன்னுடைய ஆப்த நண்பர்களாகச் சிலரைச்செய்துகொண்டும் அத்தகையநேசத்தை

அறிவீனத்தினல் தன்னிடம் கொண்ட அவ்வரசர்களுடைய கண்களில் வெகு சாமர்த்தியமாக மண்ணைத்தூவி அவர்களுடைய அருமைக்குமாரிகளைத் தன்ஆசைக்குறிய காதலிகளாக வழங்கும்படி வற்புறுத்தியும் இன்னும் பல தந்திரங்களை நயமாகவும் பயமாகவும் கையாண்டு தன் வசம் செய்துகொண்டான். ராணுசங்கரன் காலத்திலேயே பேபர் சில தந்திரங்களைக்கையாண்டு ராஜபுதனத்தை அப்பொழுதே கவிழ்த்து விடுவதற்குக் கருதியிருந்தான். ஆனல் ராஜபுதனத்தின் சிற்றரசர்கள் எல்லாம் சங்கரனுடைய பராக்கிரமத்தில் நம்பிக்கைகொண்டு அவனுடைய தலைமையின்கீழ் அன்னிய ஆதிக்கத்தை அகற்றுவதற்கு துணிவு கொண்டிருந்தனர். சங்கரன் இறந்தபிறகு உதயசிம்மன் என்ற பெயருடன் ஓர் பேதைமன்னன் சித்தூரின் சிம்மாசனத்திலேறி அந்நாட்டுக்கு அவமானம்விளைவித்திராமலிருந்தாலும் அல்லது அக்பர்போன்ற ஓர் இந்திர ஜாலக்காரன் அப்பொழுது தோன்றாமல் போயிருப்பினும் பிரதாபனுக்கு இவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டிருக்காது என்று நாம் நிச்சயமாகக் கூறலாம்.

சங்கரனின் வீழ்ச்சிக்குப்பிறகு ராஜபுதனத்தின் சிற்றரசுகளுக்குத் தலைமைவகித்து போர்முகத்தில் நிறுத்துவதற்குரிய சாமர்த்தியம்படைத்த வீரர்ஒருவரும் பிரதாபன் தலையெடுக்கும் வரையில் தோன்றவில்லை, தலைவனின்றி தத்தளித்த சிற்றரசுகள் உதயனது சீரிழந்த பரிபாலனத்தில வெறுப்புக்கொண்டு மனம் இழந்தது ஆச்சரியமல்ல. அக்பரைத் தனித்தனியாக போர்முகத்தில் எதிர்க்கப்போதுமானபலம் அவர்களுக்கில்லை அவர்களை ஒன்றுபடுத்தி திறமையுடன் நடத்தத் தலைவனுமில்லை எனவே ராஜஸ்தானம் சீர் குலைந்தது. அக்பரும் ஆனந்தங்கொண்டனன். அதனல்தான்பிரதாபன் பட்டமேறிய போதுதேசமிருந்தநிலைமை மிகவும் அதைரியத்தைக்கொடுக்கக்கூடியதாகவேயிருந்தது. இருப்பினும் உத்தமவீரர்களின்லக்ஷணம் பேராபத்துபெருகிநிற்கும்பொழுதுதான் நன்கு வெளிப்படுவது இயற்கையல்லவா எந்தவிதத்தில் பார்த்த போதிலும் அதி பயங்கரமான நிலைமையில் தேசம் இருந்தது பிரதாபனைப்போன்ற நெஞ்சுறுதியும் ஒப்புயர்வற்ற தேசபக்தியும் வாய்க்கப்பெறாத எவனும் இத்தகைய நிலைமையைக்கருதி மனமிழந்து வீழ்ந்திருப்பான் என்பதில் ஐயமில்லை.

ராஜபுதனத்தில் முக்கிய சமஸ்தானங்களான மாருவாரமும், பூவிந்தமும், ஆம்பரும் மொகலாயருக்குச்சாதகமாக அக்பருடையசாமர்த்தியத்தினல் திருப்பப்பட்டுவிட்டன. அந்நாட்டின்உயர்குலத்தில்பிறந்தராஜகுமாரிகள்பலர் அக்பரின் ஆசை நாயகிகளாக ஆனர்கள். அக்பரின் நட்பைத்தேடிக்கொண்டு குலப்பெருமையை அடியுடன் நீத்து அன்னிய ஜாதியானுகிய அவனுக்கு தங்கள்பெண்களைக் காதற்கிழத்திகளாக அளித்தவர்கள் மிக உயர்ந்த பதவியில் வைக்கப்பட்டனர். அவர்களுடைய ராஜ்யங்களுக்கு மொகலாய ஆட்சியே ஓர் பாதுகாப்பாயிற்று. ரஜபுத்திர தலைவர்களில் பலர் தத்தம் மதியிழந்து சுகவாழ்க்கையை நாடி மொகலாய ஏகாதிபத்தியத்திற்குச் சாதகமாகத் துணைபுரிந்து நின்றனர். ராஜபுதன நாடுகளின் சுதந்தரம் போயிற்று. ரஜபுத்திரவீரர்களின் தேசபக்திதலையெடுக்கவொட்டாது அடக்கிவைக்கப்பட்டது. ரஜபுத்திரமங்கையர்களின் உயர்ந்த பெருமைக்கு மாசுஏற்பட்டுவிட்டது. அக்பர் என்ற மகா மாயாவியினல் சூட்டப்பெற்ற அழகிய பளபளப்பான பொற்சங்கிலிகளைக்கண்டு மதிமயங்கி 'அவை பொன்னல் செய்யப்பட்டிருப்பினும் தங்களை, இறுகப்பிணிக்குமே'' என்ற அறிவு சிறிதுமில்லாமல் ராஜபுதன நாடுகள் பல அதனைச் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டுவிட்டன. எங்கும் துக்க மயமான நிலைமை, இந்த நிலைமையில் மீவாரத்தின் கப்பலை ஒழுங்காகச் செலுத்தி புயலில் அகப்படாமல்காத்து கரையேற்றக்கூடிய வீரசிகாமணியாவன் ?

இழந்த மீவாரத்தின் சுதந்திரத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்கும் ரஜபுத்திரரின் இருதயத்தில் ஊடுருவிக்கிடக்கும் தேசபக்தியை எத்தகைய கொடிய ராஜதந்திரத்தைக்கொண்டும் அழித்துவிடுதல் முடியாதகாரியமென்பதை விளக்கிக்காட்டவும் குலப்பெருமையை மறந்து ஸ்வதர்மத்தைத் துறந்து அன்னியனுக்குப் பெண்ணளித்து அதனல் பதவிபெற்று உயிர்வாழத் துணிந்த பேதைகளுக்கு ஞானச்சுடர் ஊட்டி ஓர் படிப்பினை கற்பிக்கவும் பலசேனைகளுடன் எதிர்த்த பகைவர்களையெல்லாம் போர்முகத்தில் எதிர்த்து வெற்றிவாகைசூடி தம்மால் தோற்கடிக்கப்பட்ட அப்பகைவர்களை மீவாரஅரசர்கள் சிறையிட்டு வைப்பதற்கு உரிய இடமாக பலவருஷங்களாய் விளங்கிவந்த சித்தூரின் வெற்றிமண்டபத்தின் உச்சியில் பறந்துகொண்டிருந்த அன்னியரின்கொடியை அறுத்துவீழ்த்தி தேசமாதாவின் உள்ளம்களிக்க அன்னவளுக்குச் சுதந்தரமாலை சூட்டவும்; மாசிலாத மேன்மைபெற்ற பாரதத் தாயின் திருவயிற்றில் அவ்வப்போது சிற்சிலஅரிய மாணிக்கங்கள் தோன்றி அப் புவனமாதாவுக்கு ஏற்படும் துயரங்களைக் களைந்து அம்மாசு துடைத்துச்செல்வது உறுதியென்பதை நிலைநாட்டவும்; ஓர் மகான், ஓர் தீரன்,



## கிராம பஞ்சாயத்து புத்தக சாலைகள்.

(கல்லமநாயக்கர்பட்டி ஸ்ரீமான் சி திரு வேங்கடப்ப நாயுடு எழுதுகிறார்)

அறிவுதான் மானிடரைப்பிறந்த ஒவ்வொருவனும் அடையவேண்டியபொருள். உலகத்தில் அறிவில்லாதவன் மிருகத்திற்கொப்பானவனென ஆன்றோர் கூறுவர். ஒருதேசமோ அல்லது சமூகமோ முன்னேற்றமடைந்து சீர்பெற்று விளங்குவதற்கு அவர்கள் அறிவைப் பெறவேண்டியது அத்யாவசியம். அன்றியும், அவர்கள் தங்கள் அறிவை பெருக்கிக்கொள்ள வேண்டியதும் அவசியமே. அங்ஙனம் அறிவைப் பெறுவதற்கும், விருத்திசெய்து கொள்வதற்கும் அநேகசாதனங்களுண்டெனினும், அவைகளுக்கெல்லாம் அடிப்படையாயுள்ளது புத்தக வாசக சாலைகளே.

புத்தகசாலையின் மூலம் மனிதர்கள் தங்கள் அறிவைப் பெருக்கிககொள்ளச் சௌகரியப்படுகிறது. அறிவை விசாலிக்கச் செய்வது கல்வி. கல்விக்கு உபகரணமாயுள்ளவை பெரும்பாலும் புத்தகங்களே. இவைகள் நமக்குமுன் அனேக வருஷங்களாகப் பலதுறைகளில் ஆராய்ச்சிசெய்து அதன்பயனைப் பெரியார்கள் வெளியிட்டுள்ள நூல்களேயாம். நல்ல அறிவாளிகளிடத்து சம்பாஷிப்பதாலும், அவர்களுடன் கூடிப்பழகுவதாலும் அனேக விஷயங்களை அறியக்கூடும், எனினும் இச்சாதனம் யாவர்க்கும் கிட்டாததாகும். தவிர இம்மாதிரி விஷயங்களை அறிய விரும்புகிறவன், தன் மனதை வேறு சிந்தனைகளில் செல்லவிடாமல் ஒரே பற்றுடையதாக அடக்கியாளத் திறமை யுள்ளவனாய் இருக்கவேண்டும். இது சாமானியமல்லவென்பதை யாவரும்ஒப்புக்கொள்ளக்கூடும், பெரியோர்களைத் தேடிச்சென்றடைவது சுலபமல்ல. சாவகாசமும் பெரும்பான்மையோருக்கில்லை. அன்றியும் அவர்களிடமிருந்து கல்வியைப் பெறுவதும அரிதே. ஆனல் அவர்களின் அறிவு ஆராய்ச்சி, சிந்தனை முதலியவற்றின் பயனுக உண்டான அரிய பெரிய விஷயங்களெல்லாம் புத்தக ரூபத்தில் நமக்கு எளிதாய்க் கிடைக்கின்றன நேரில் கல்விமான்களோடு சம்பாஷிப்பதனல் தற்காலம் உயிரோடுள்ளவரிடமே சம்பாஷிக்கலாம்.

ஆயிரக்கணக்கான வருடங்களாக இருந்துவந்த ஆலயங்களும் அழிந்திருக்கின்றன. பல்லாண்டுகளாகச் சீரும் சிறப்புமாயிருந்த நாடு நகரங்களும் இருந்த இடந்தெரியாதுபோயின. ஆனல் இறந்தும் இறவாத நம்முன்னோர்களாக்கிவைத்த நூல்கள் உலகாரம்பம் முதல் இன்றளவும் திகழ்கின்றன. இனி இவ்வுலகுள்ளளவும் திகழ்ந்துக்கொண்டேயிருக்கும் நூல்களைதோற்றுவித்த பெரியார் நம்மைப் பிரிந்து சென்றிருப்பினும் அவர்களுடைய ஆழ்ந்த கருத்துகள், அனுபவங்கள், உபதேசங்கள் என்றும் அழியாதவாறு புத்தகங்களிற் பொதிந்து கிடக்கின்றன. நமக்குமட்டும்போதுமான சக்தியும், ஊக்கமும் இருப்பின் அவ்விஷயங்களை நம் நன்மைக்காக உபயோகப்படுத்திக் கொள்ளக்கூடும். ஆதலின், தேர்ந்தெடுக்கப் பெற்ற பிரசித்த பண்டிதர்கள் எழுதிய புத்தகங்களைக்கொண்ட ஓர் புத்தகாலயம் மனிதர்க்கு ஒப்புயர்வற்ற அணிகலனாகும்.

நம்நாட்டில் கல்வி கற்றவர்களின் தொகை மிக மிகக்குறைவாயிருக்கிறது. ஏனெனில் வறுமையால் பீடிக்கப்பட்டுள்ள நந்தேயத்திய ஜனங்களிற் பெரும்பாலோர் கிராமவாசிகளா யிருக்கிறார்கள். கிராம ஜனங்களின் தொழில் முக்கியமாய் விவசாயமாகும். விவசாயிகள் அளவுக்கு மிஞ்சிய கடனில் மூழ்கித்தங்கள் தொல்லைக்கோ ரெல்லைகாணுது தவிக்கின்றனர். அரை வயிற்றுக் கஞ்சிக்கும் வழியில்லை. இப்பரிதாப நிலையில் எங்ஙனம் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கனுப்புவர். காலை முதல் மாலைவரை நெற்றி வியர்வை நிலத்திற்சிந்த பாடுபட்டாலும் மூன்றணு கூலி கிடைப்பதுங் கஷ்டமாயிருக்கிறது. மாலை 6 மணிக்கு வீடு திரும்பியதும் நொய்யரிசி (குருணை) யை வாங்கிக் கஞ்சிகாய்ச்சித் தங்கள் குழந்தைகட்கிட்டுத் தாங்களும் உண்கின்றனர். காலையில் கஞ்சியில் எஞ்சியுள்ளதைத் தம்பிள்ளைகளுக்குக் ஊட்டிமீதமிருப்பின் தாங்களுமுண்டபின் வழக்கம்போல்தொழில்மேற் செல்வர். காலையிற் சிறிதுநொய்க்கஞ்சியைக் குடித்த சிறுவர்கள் மழைத்துளியை எதிர்நோக்கி

யிருக்கும் சாதகப் புள்ளைப்போன்று தங்கள் தாய் தந்தையர் வரவை எதிர்பார்த்து வழிமேல் விழி வைத்துப் பார்த்தவண்ண மிருக்கின்றனர். இவர்கள் பாடசாலைக்குச்சென்றால் எவ்வளவுஉற்சாகத்தோடு தங்கள் ஆசிரியர் சொல்லக் கேட்டவை விடாதுள்ளத் தமைத்துக்கற்பர்என்பதைஅறிஞர் தாங்களே உணர்ந்துகொள்க.

இத்தகைய துன்பங்களை யெல்லாஞ் சகித்துக்கொண்டு தங்கள் குழந்தைகளைக் கல்விக்கற்கச்செய்ய வேண்டுமென்ற பேரன்புடன் சிலர் தம் பிள்ளைகளைப் பள்ளிக்கனுப்புகின்றனர். கிராமப் பாடசாலைகளில் மாணவர்கள் ஐந்தாம் வகுப்பு முடிந்ததும் படிப்பை நிறுத்திவிட்டுத் தங்கள் பெற்றோர் தொழிலைப் பின்பற்றுகின்றனர், அவர்களை மேற்படிப்புக்கு அனுப்ப அவர்களின் தரித்திரநிலை இடங் கொடுக்கிறதில்லை, அதுவரை படிக்கவிட்டதே பிரம்மப்பிரயத்தனமாகும் இங்ஙனம் ஐந்தாம் வகுப்புடன் பாடசாலையை விட்டுவிட்டசிறுவர்கள் தாமே கற்றிருக்கும் சிறிது கல்வியைக்கூட விருத்திசெய்துகொள்ள வழியின்றி நாளடைவில் மறந்து விடுகின்றனர். பாடசாலையைவிட்ட நாலைந்து வருடங்களுக்குப் பிறகு ஓர் புத்தகத்தைக்கொடுத்து அதிலுள்ள வசனபாடத்தை அதாவது அவர்கள் முன்பு படித்ததையே வாசிக்கச்சொன்னால், எழுத்துக்கூட்டி வாசித்து தட்டித்தடுமாறுகின்றனர். அந்தோ! என்னே! பரிதாபம்! அவர்கள்தான் யாதுசெய்வர். வயிற்றுக்கொடுமைக் கவலையிற் சிறிது ஓய்வு நேரம் கிடையாது. அபூர்வமாகக் கிடைப்பினும் படிக்கப் புத்தகங்கள் கிடையாது இத்தகைய மாணவர்கள் கிராமத்தில் புத்தகசாலையும் வாசகசாலையுமிருந்தால் அதை உபயோகித்துத் தங்கள் கல்வியறிவைப் பெருக்கிக் கொள்வாரன்றோ

கிராமங்களின் தேவைகளைக் கிராமவாசிகளே நன்குணர்வாராதலால், அரசாங்கத்தாரின் உதவி பெற்றுத் தங்கள் தேவைகளைத் தாங்களே பூர்த்திசெய்துகொள்ளவும் தங்களைத் தாங்களே நிர்வகித்துக்கொள்ளும் சக்தியை அனுபவத்தில் பெறுவதற்குமென்றே கிராமப்பஞ்சாயத்துக்கள் ஸ்தாபிக்கப்பட்டன. பஞ்சாயத்தின் முக்கிய நோக்கங்களிலொன்று கிராமவாசிகளின் கல்வியறிவைப்பெருக்குவதாகும். கல்வியறிவு பெருகுவதற்குச் சிறந்த சாதனங்களுள் புத்தகசாலைகள் இன்றியமையாதவையெனக்கருதி அரசாங்கத்தார் அதற்கெனக் கேட்குந்தொகையில் பாதி கொடுத்துவந்து, இப்போது முழுத்தொகையுங் கொடுத்து வருகின்றனர். இங்ஙனம் கிராண்டுபெற்றுப் பெரும்பான்மையான பஞ்சாயத்துகள் புத்தகசாலைகள் ஏற்படுத்தியுள்ளன. சிறந்த அருமையான விலையுயர்ந்த புத்தகங்களைச் சேகரித்திருக்கின்றன. புத்தகசாலைகளின் முக்கியத்தையறிந்து ஆந்திர தேசத்தவர்கள் இத்துறையில் நம்மைவிட வெகுதூரம் முன்னே சென்றிருக்கின்றனர். தமிழ்நாட்டில் புத்தகசாலை இயக்கம் நன்குபரவவில்லை இன்னும் சில பஞ்சாயத்துகள் புத்தகசாலைகளை ஏற்படுத்திக்கொள்ளாததே இந்த எனது கூற்றைவலியுறுத்தும். புத்தகசாலைகளை ஏற்படுத்திக்கொண்ட பஞ்சாயத்துகளாவது அதனை உபயோகித்துப்பயனடைந்துள்ளதா எனின் மிகவும் குறைவென்றே சொல்லவேண்டும்.

எங்ஙனமெனில், பஞ்சாயத்துக்களின் பிரசிடெண்டுகளாக அந்தஸ்துள்ள சிலபெரிய மனிதர்கள் வருகிறார்கள். அன்னாரிடஞ் சேர்ந்த புத்தகங்களானது அவர்களின் மூலை வீட்டிலுள்ள பீரோவைப்போய்ச் சேருகின்றன. பிரசிடெண்டுபுத்தகங்களின் அருமை தெரியாதவராயிருப்பின்மச்சு வீட்டின் மூலையில் அலக்ஷியமாய்ப் போட்டுவைக்கிறார். பிரசிடெண்டு பெரிய மனிதரானதால் அவரை நெருங்கிப் புத்தகங்கள் கேட்பதுமில்லை கேட்டால் அவருக்குச் சாவகாசப்படுவதுமில்லை. பொது ஜனங்கள் போகுபோது பிரசிடெண்டிருப்பதில்லை. பிரசிடெண்டிருக்கும்போது பொதுஜனங்கள் போவதில்லை. ஆக புத்தகங்கள் மூலையிலேயே முடங்கிக்கிடக்கின்றன. அந்தோ என்ன மூடத்தனம். அருமையான புத்தகங்களை வீணே போட்டுவிட்டார்களே மூட ஜனங்கள் தான் கவனிக்கவில்லையென்றால் நாமாவது புரட்டிப்பார்ப்போம்" என்று எலிகளும், பாச்சானும், கரையானும் அவற்றைத்தாராளமாக உபயோகிக்க ஆரம்பித்து விட்டன. தங்கடமையைச் செய்வதில் எலி கரையானுக்குள்ள அறிவு மனிதர்க்கில்லையே.

அநேகமாகப் பஞ்சாயத்துப் பிரசிடெண்டுகளாக இருப்பவர்களுக்கு அவர்களின் அவகாசமின்மையும் கௌரவமும் புத்தகசாலையை நிர்வகிப்பதற்கிடந்தாராயிருக்கலாம் என்றால், அந்த வேலையைச்செய்யத் தகுதியான ஒருவரிடமாவது அந்தக கிராமத்தில் பாடசாலையிருப்பின் அதன் உபாத்தியாயரிடமாவது அவ்வேலை

# வேப்ப மரம்.

## ஓஷதியின் சிறப்பு.

(வேம்பை விரும்டக் கரும்பாகும்.)

16வது நூற்றாண்டில்; அக்பாவது பேபர் மன்னன் இந்தியாமீது படையெடுத்துவந்தபோது அவாது சிஷ்யர்களில் சிலர் இந்தியாவிலுள்ள வேப்பமரங்களைக்கண்டு மிகவும் ஆச்சரிய மடைந்தார்கள். ஏனெனில் இந்தியாவிலுள்ள வேப்பமரங்கள் பாரசீகத்திலுள்ள ஓர்வித மரத்தைப்போல்இருப்பதும்: அவைகளில் அற்புதமான மருந்து சத்துகள் கலந்திருப்பதும், அவர்களுக்கு மிகுந்தஆச்சரியத்தை உண்டுபண்ணியது. பம்பாய் மாகாணத்தில் வேப்பமரங்கள் மிகவும் அதிகம். இங்கிலாந்தில் தேக்குமரங்கள் எவ்வளவு பிரசித்தமாக இருக்கின்றனவோ அதுபோல் இந்தியாவில் வேப்பமரங்கள் மிகவும் பிரசித்தமாக இருக்கின்றன, நட்சத்திரக் கூட்டங்கள் போல் அதன் புஷ்பங்களின் அழகும், மனதிற்கினிய வாசனையும், குழந்தைகள் காதுகளில் போட்டுக்கொள்ளும் டோலக்குகள் போன்று அதன் காய்களின் வனப்பும், டளபளப்பாயும், ரம்பம்போன்ற அழகிய உருவமுடையதாயுமிருக்கும். அதன் இலைகளின் அடர்த்தியும் கண்களையும் மனதையும் ஒருங்கே கொள்ளைகொள்ளுகின்றன. வேப்பமரங்கள் ஆதியில் சுமத்திரா தீவில்தான் இருந்தனவென்றும், அவைகள் பிற்காலத்தில்தான் இந்தியாவில் உற்பத்தியாயிற்றென்றும் சிலர் கூறுகின்றனர். ஆனால் இதற்குஆதாரமாக ஒருவிவரமும் தெரியவில்லை.

### வேப்பமரத்தின் உபயோகம்.

நல்ல வெய்யிலில் ஒருவர் வேப்பமரத்தின் நிழலில் போய் நின்றால் அது மிகுந்தகுளிர்ச்சியைக்கொடுக்கிறது அதன் இலைகள் அடர்த்தியாகவும், கிளைகள் பரந்தும் இருப்பதால் அது ஓர் குடிசைபோல் அழகாக இருக்கிறது. இவ்வுலகத்திலுள்ள எந்த மரங்களைக்காட்டிலும் வேப்பமரத்தினால் கிடைக்கும் பிரயோஜனம் கொஞ்சமல்ல. அதன் இலைகள், காய்கள், பூக்கள், வேர், மரம் முதலிய யாவும் பிரயோஜனமாகின்றன. அதன் காய், பூ, இலை முதலியவைகளால் பலவித கொடிய வியாதிகள் சொஸ்தமாவதால் இந்தியாவிலுள்ளவர்கள் மாத்திரமல்ல, உலகத்திலுள்ள பல தேசங்களிலுமுள்ளவர்கள் அதன்உதவியை நாடுகிறார்கள்.

### வேப்ப எண்ணெயின் உயர்வு,

இப்பருவத்தில்தான் வேப்பமரங்கள் அழகிய துளிர்களுடனும், கொத்துக்கொத்தாக புஷ்பங்களுடனும் சிறந்து விளங்குகின்றன. வேப்பங்காய்களிலிருந்துஎடுக்கும் எண்ணெயில் உயர்ந்த கந்தகசத்து கலந்திருக்கிறது. அதை உட்கொள்ளுவதால் பயங்கரமான க்ஷயரோகங்கள்கூட நிவர்த்தியாகவிடுகிறது. காட் லீவர் எண்ணெய்க்கு எவ்வளவு சக்தியுண்டோ அதைக்காட்டிலும் வேப்ப எண்ணெய்க்கு அதிக சக்தியுண்டு. இன்னும் அதன் இலைகள் அந்து போன்ற பூச்சிவகைகள் வாரமலும் தடுக்கின்றன: வேப்பமரத்தின் புகை சிறந்த ஔஷதமாகிறது.

### தெய்வீகத்தன்மை.

முஸ்லிம்களும், ஹிந்துக்களும் சிலஇடங்களில் வேப்பமரத்தை தெய்வீகமரமென்றுகூறி கொண்டாடுகிறார்கள். முஸ்லிம்கள் விவாகசமயத்தில் வேப்பம்விதைகளை நெருப்பில் போட்டுக் காய்ச்சும்வழக்கம் இன்னும் இருந்து வருகிறது. அதனால் துர்த்தேவதைகள் அவர்களிடம் அணுகாதெனக் கூறுகின்றனர். ஆனால் இவ்விஷயம் மூடநம்பிக்கையா, அல்லவா வென்பதைப்பற்றி நாம் ஈண்டு கவனிக்கவேண்டிய அவசியமில்லை எனினும் அவ்விதைகளைக் காய்ச்சுவதிலிருந்து வரும் புகையால் பல வியாதிகள் சொஸ்தமாகி தேகாரோக்கியத்தை உண்டுபண்ணுகிறதென்ற உண்மையை ஒருவரும் மறுக்கமுடியாது. இன்னும் நம் நாட்டிலுள்ள பலவிடங்களில் பேய், பிசாசு அணுகாதென்ற நம்பிக்கையுடன் பிரயாணத்திற்கு புறப்படுபவர்கள வேப்பஇலையை கையிலோ; தலையிலோ வைத்துக்கொள்ளுவது வழக்கமாக இருந்துவருகிறது அவ்விலைகளின் சத்தை இன்றுகூட அடிக்கடி பலர் உட்கொண்டு வருகின்றனர், எனவே இவ்விதம் பலவிதங்களில் உபயோகமாக இருந்துவரும் வேப்பமரத்தை சிலர் தெய்வீக மரமாகக்கருதுவதில் ஒன்றும் ஆச்சரியமில்லை இந்தியாவிற்கு இயற்கை யளித்திருக்கும்கொடைகளில் இது ஓர் சிறந்த கொடையாகும்.

---

ஓர் ஒப்பற்ற தியாகபுருஷன், ஓர் தேச பக்தசிகாமணி, பிரதாபன் என்ற புண்ணியநாமத்துடன் அவதரித்திருந்தனன்.

பகலவன்முன் மின்மினிகள் தத்தம் ஒளியிழந்து மறைவதுபோல் தீரபுருஷனும் தேசபக்தனுமாகிய பிரதாபனுக்கு முன்னே மேற்கூறப்பட்ட கஷ்டங்களெல்லாம் ஓர் அற்பமாகக் காணப்பட்டன. உலகத்தில் பெருங் காரியங்களைச்செய்து உரியபுகழை உலகுள்ளளவும் நிலைநாட்டப் பிறந்த மேதாவிகள் ஆபத்துக்களுக்கும் கஷ்டங்களுக்கும் அஞ்சுவார்களோ ?

இரவு மணி 12 இருக்கலாம் கன்னங்கரேலென்று இருள் எங்கும் சூழ்மியிருக்கின்றது. நகரிலுள்ள பல [illegible]களிலும் தீபங்கள் அணைக்கப்பட்டுவிட்டன. ஆனால் [illegible]புரத்தின் அரண்மனை 2வது உப்பரிகையில் ராணுவின் அறையில் தீபம் எரிந்துகொண்டிருந்தது. ஊர் முழுவதும் கண் உறங்கிக் களைப்பாறும் அந்நடுநிசியில் ராணாபிரதாபன் தூக்கமில்லாமல் கண்விழித்துக்கொண்டு தன் அறைக்குமுன் வந்து உலாவிக்கொண் டிருந்தனன். தன்னந்தனியனாய் அந்நல்லிரவில் ஏகாங்கியாய் கவிழ்ந்த முகத்துடன் பார்த்தவர் பரிதவிக்கத்தக்க துக்கநிலையில் மூழ்கி நடந்துகொண்டிருந்தனன். நாம் சற்று அவனருகில் அவனறியாதுசென்று உற்றுக்கேட்போமாகில், அவனுடைய வாயிலிருந்து தாராளமாய் சில வார்த்தைகள் வந்துகொண்டிருப்பதை நன்குகேட்கலாம் அவன் தன்னையும் மறந்து ஏதோஉரத்தகுரலில் பேசிக்கொண்டிருந்தனன். (தொடரும்)

## தியாகசமுத்திரம் T. S. ருஜகோபாலய்யர்.
## களஞ்சேரி T. P. அய்யாஸாமி அய்யர்.

ஜவுளி வியாபாரம் 48 பெரியதெரு கும்பகோணம்.

எங்களிடத்தில் பெங்களூர், கர்மாவரம், காஞ்சீபுரம், ஆரணி, பெரைஸ், கராச்சி முதலிய
பலவூர் ஜரிகைசேலை, சுத்த பட்டுசேலைகளும், சேலம். காஞ்சீபுரம, ஆரணி, துகிலி, துரையூர்,
குளித்தலை, முதலிய பலவூர் வெள்ளை ஜவுளிகளும, ஜரிகை துப்பட்டாக்களும், மதுரை சுன்னடி
சேலைகளும், துப்பட்டாக்களும ஏராளமாய்ஸ்டாக்செய்து சாயத்துச்குகாரண்டியுடன குறைந்த
லாபத்தக்கு விற்றுவருகிறோம். தாங்களும் தங்கள் இஷ்டமித்திரர்களுக்குபசொல்லி நேரில்வந்து
பார்த்து வியாபாரத்தை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

## மலையாள மல்லிகைவிதை.

மலையாள மல்லிகைப்புஷ்பங்கள் குதூகலமான வாசனையும், அதி அழகுமுடையவை. செடி 6அடி
உயரம்வளரும். ஒருசெடியில் சுமார் 500புஷ்பங்கள் ஒரே சமயத்தில்புஷ்பித்து அலங்காரமாய் நிற்பதைக்
காண யாவரும் ஆச்சரியப்படுவார்கள். பூ 8அங்குல சுற்றளவுடையது. நிறம் மஞ்சள். பங்களாக்களுக்கும்
பூந்தோட்டங்களுக்கும் இது மிகஅலங்காரமானது. தமிழ் நாட்டில் இதுவரையிலும் பாராத புஷ்பச்செடி
இது ஒன்றுதான். இன்னுமோர் விசேஷமயாதெனில் இந்த மலையாளமல்லிகைச்செடிகள் வளருமிடத்தில்
பாம்பு முதலிய விஷஜந்துக்கள் பிரவேசிக்கமாட்டா.

விதை பாக்கெட் 1க்கு விலை ரூபா 0—4—0. 1டஜன் பாக்கெட்டுகளுக்கு ரூபா 2—8—0

இன்றே எழுதுங்கள்

எஸ். ஸி. நாதன்,
எலப்புள்ளி P.O. பாலக்காடு.

கவனியுங்கள்! கவனியுங்கள்!

அனேக வைத்தியர்களும், ஹக்கீம்களும் எங்கள் ஔஷதங்களை வாங்கி
சொந்த ஔஷதங்களைப்போல் வேறுநாமங்களைச்சூட்டி விற்பனை செய்துவருகிறார்கள்

## சந்திரப்பிரபா மாத்திரைகள்.

தீவிரமான வெள்ளை (வெட்டை) மூத்திர நாளங்களில் எரிச்சல், மூலம், நீர்ச்சுருக்கு,
இவைகட்கு பரமஔஷதம். ஸ்திரீ ரெத்தினங்களுடைய வியாதிகளுக்கு நிகரற்ற ஔஷதம்.

16-மாத்திரைகளடங்கிய டப்பி 1க்கு ரூ 1—0—0 தான்

கேட்போருக்கு கேட்லாக் இனம் உடனே எழுதுக

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
நெ. 26, பிராட்வே மதராஸ்




## கிராம உத்தியோகஸ்தர்களுக்கோர் விக்ஞாபனம்.

( ஸ்ரீமான், S. M. ருஜகோபாலய்யங்கார், கரணம், சாக்கோட்டை. )

சென்ற பத்துவருடங்களாக நான் நம்முடைய
முன்னேற்றத்தைக் கருதி நடத்தப் பட்டுவரும்
தாலூகா, ஜில்லா, மாகாண கி. உ.சங்கங்களில் ஒவ்
வொன்றிலும் ஒரு அங்கத்தினராக விருந்து
அவைகளின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும்
கவனித்து வந்திருப்பதிலிருந்து இதுவரையில்
நம்முடைய குறைகளை சரிவர மேல் அதிகாரிக
ளால் கொஞ்சமேனும் அனுதாபத்துடன் கவனிக்
சப்படவில்லை என்பதுதான் என்னுடைய முடி
வான அபிப்பிராயம். அவ்விதம் அனுதாபமேற்
படாமலிருப்பதன் மூலகாரணம யாதெனின் (அ)
நாம் ( கரணம், கிராமமுன்சீபு ) கிராமத்திற்கு
இருவராக மாகாணமுழுவதும் சிதரிக்கிடக்கின
றோம். (ஆ] கரணம் கிராமமுன்சீபுஆகிய நம்
இருவருக்குள்ளாகவே சுயநன்மையைக்கருதியோ
உத்தியோக முறைமையினலோ மற்றும் பலகாரணங்
களை முன்னிட்டோ ஒருவருக்கொருவர்பெரும்பா
லும் ஒற்றுமைக்குறைவாக விருந்து வருகிறோம்,
இ) நம்முடைய சங்கத்தை நாம் ஒவ்வொருவரும்
தனக்குரிய சொத்தென மதித்து அதன்தேவைக்
குப் போதிய மட்டிலேனும் மூலதனம் சேமித்துக்
கொண்டு அதனல் கூட்டப்படும் மீட்டிங்கிற்கு
நாம் ஒவ்வொருவரும் அவசியம் தவராமல்போய்
தீர்மானங்களில் நாமும் நம்முடைய பொதுவான
குறைகளை நிவர்த்திக்க வழிதேடுவது நம்கடமை
களில் ஒன்றென நாம் உணர்ந்து கொள்ளாமலிரு
ந்து வருகிறோம் (ஈ) நம்முடைய சங்கத்தினல்
தீர்மானிக்கப்படும் தீர்மானங்களை நாம் ஒவ்வொருவ
ரும் கட்டுப்பட்டு அதன்படிநடக்காமல் பெரும்பா
ன் மையோர் அலக்ஷியமாக விருந்து வருகிறோம்.
(2) கிராமத்திய பொது ஜனங்களுள் நாமும் ஒரு
வன் என்பதை மறந்து நம்மில் பெரும்பாலோர்
அசட்டுத்தனத்தினலோ அறியாமையினலோ சுய
நன்மையைக்கருதியோ அதிகாரமமதையினலோ
பொது ஜனங்களின் பிரியத்தையும் விசுவாசத்தை
யும் செல்வாக்கையுமிழந்து விடுகிறோம் மேலும்
அகம்பாவத்தினலோ அறியாமையினலோ நமமில்
சிலர் மேலான அதிகாரிகள் பால் வணக்க மற்ற
பான்மையில் நடந்து கொள்வதனல் அன்னரின்
கோபத்திற்கவர்கள் ஆளாகிறதுடன் மற்ற கிராம
உத்தியோகஸ்தர்களிடமும் பொதுவாகவே துவே
ஷபுத்தியைஉண்டுபண்ணிவிட ஹேதுவாகின்றது.
எனவே முதலில மேற்கூறியதும் நம்மில் பெரும்
பான்மை யோரிடமிருப்பதுமாகிய குறைகள் ஐந்
தையும் மட்டி லுமாவது நாம்தகுந்தபடி முயற்சி
செய்து நிவர்த்தித்துக்கொள்ளாத வரையில்நமக்கு
எவ்வித நன்மையையும் எதிர்பார்க்க முடியாதென்
பது திண்ணம்! திண்ணம்!! முக்காலும்திண்ணம்!!!
பின் அதற்கியாது செய்வதெனின் எம்மாபினே
ராயினும் கிராம உத்தியோகஸ்தர்களாகவுள்ளோர்
அனைவரும் உடன் பிறந்த சகோதரர்களே என்ற
உணர்ச்சிபெரிதும்பற்றி ஒருவருக்கொருவர் துவே
ஷபுத்திபாராட்டாது ஒற்றுமையாக நமது சங்கங்
களை நம்மில் ஒவ்வொருவரும் தனக்குரியதாய
பொருளெனமதித்து ஒவ்வொருவரும் தவராமல்
பாக்கியன்னியில் சந்தாத்துகையைச் செலுத்துவ
துடன் நின்றுவிடாது மேலதிகாரிகள் கட்டளைக்
குக்கீழ்படிந்து அழைக்கப்படுமிடங்களுக்கு சரீர
சிரமத்தையேனும் அல்லல்களையேனும்ஜோலிகளை
யேனும் பொருட்செலவையேனும் கொஞ்சமேனும்
கவனியாது செல்வதேபோல் நமது சங்கத்தினல்
அழைக்கப்படு மிடங்களுக்குச்சென்று நம்மாலி
யன்றமட்டில் பொருளுதவிசெய்து நமது சங்கத்
தைவலுப்படுத்திக் கொண்டு நம்முடைய முன்
னேற்றத்திற்காகவும் சம்பள வுயர்வுக்காகவும்
அருமபாடுபட்டு அக்காரணம்பற்றியே அரசாங்
கத்தாரால் வேலையினின்றும் விலக்கப்பெற்றதன்
பிறகும்கூட கிராமஉத்தியோகஸதர்களின் குறை
கள் யாவும் தனதெனமதித்து அவைகளை நிவர்த்
திப்பதைத்தன் கடமையென்றெண்ணி யிருப்பவ
ராகிய ஸ்ரீமான் N- ஆபத்ஸகாயமய்யர் எனும்
பெயருக்கேப்பகுணமுமுள்ள உத்தமாபிமானியா
ல் நடத்தப்பட்டுவரும் மாதாந்தப்பத்திரிகையாகிய
"கிராமானுகூலன்" பத்திரிகையையே நமது
பத்திரிகையாக எண்ணி, அதன்மூல்யமாய் நம்சங்
கங்களின் மீட்டிங்கு நடவடிக்கைகளையும் தீர்மா
னங்களையும் அவ்வப்போது பிரசித்தப் படுத்திக்
கொண்டு வருவோமாகில் மேலதிகாரிகளுக்கும்

22 34 78

ஞானயோருக்கும் இனி நம்மைப்பிரித்தாள வியலாது என்பது புலப்பட்டவுடன் கதிரவனைக் கண்ட பனிபோல் நம் சொல்லொணாக்குறைகளனைத்தும் தானாகவே நிவர்த்தியாகிவிடும். ஆகையால் சகோதரர்களே! "ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே"; எனும் பாரதியாரின் உபதேசமொழிகளின் உட்கருத்தை உணர்ந்து கொள்வீர்களாக.

---

## சேலம் கிருஷ்ணகிரி தாலூகா மத்தூரில். கி. உ. சங்கம்.

மேற்படி பிர்கா கி. உ. சங்கம் 14—8—29 ல் ஸ்தாபிக்கப்பட்டது. இந்தசங்கம் ஸ்தாபிக்க ஸ்ரீமான் ராமராவ் அதிக சிரமம் எடுத்து ஆங்காங்கு சென்று சகோதர கிராமாதிகாரிகளுக்கு எடுத்துரைத்து சங்கத்தை ஏற்படுத்தினார். சங்கத்திற்கு கிராமமுனிசிப்புகளும் கர்ணங்களும் சேர்ந்து சுமார் 50 பேருக்கு குறையாமல் ஆஜராயிருந்தார்கள். மத்தூர் கிராமமுன்சீப்பும் தாலூகா. ஜில்லா போர்ட்டுகளின் அங்கத்தினருமான ஸ்ரீமான் சுப்பிரமண்ய செட்டியார் அக்ராசனம் வகித்து சபை வெகு விமரிசையாய் நடைபெற்றது சங்கம் ஏற்படவேண்டிய விஷயத்தைப்பற்றியும் கிராம உத்தியோகஸ்தர்களின் கடமை இன்னதென்பதையும் பற்றி விரிவாக எடுத்துரைத்தது மிகவும் பாராட்டத்தக்கது. வந்தனோபசாரம் சிற்றுண்டி தாம்பூலங்களுடன் சபை இனிது நிறைவேறியது.

---


தங்கமெடல் பரிசுபெற்ற T. K. வீராசாமி நாயுடு & பிரதர்ஸ, மூக்குக்கண்ணாடி ஷாப், தஞ்சாவூர்.
பிராஞ்சு:—டவுன் ஹை ஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

சகோதரர்களே! நாங்கள் ஸ்படிக்க கற்களைக்கொண்டு மூக்குக்கண்ணாடிகள் தயார் செய்து அவரவர்களின் வயதிற்குத்தக்கபடியும், கண்களை பரிசோதித்துப்பார்த்தும், கொடுக்கிறதோடும் ஷை கண்ணாடிகளுக்கு பொன், வெள்ளி, ஜெர்மன்சில்வர், ஷெல்களினால் செய்யப்பட்ட கட்டிடங்களில் அவரவர்களிஷ்டப்படி கட்டிக்கொடுக்கிறோம், (Long Sight) சளேஸ்வரக்காரருக்கும், (Short Sight) பார்வைமட்டாயிருக்கிற சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும், ஆப்ரேஷன்செய்த கண்களுக்கும், தலைவலியால் கஷ்டப்படுகிற சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும் இன்னும் கண்களில் எவ்விதமான கெடுதிகள் உள்ளவர்களுக்கும் கண்களை பரிசோதித்துப்பார்த்து அவரவர்களுக்கு ஏற்ற கண்ணாடிகள் கொடுக்கிறோம்.

வெயிலின் உஷ்ணம், காற்று, தூசி, முதலியவைகள் கண்களைக்கெடுக்காமல் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டு அநேகவிதமான குளிர்ச்சிகண்ணாடிகள் எங்களிடம் கிடைக்கும். கண்களுக்கு குளிர்ச்சி கொடுக்கக்கூடிய தைலங்களும், மருந்துகளும், எங்களிடத்தில் இருக்கின்றன. கண் இல்லாதவர்களுக்கு கண் வைத்துக்கொள்வதற்கு இஷ்டப்பட்டால் எங்களிடத்தில் கண்ணாடியால் செய்த போலிக்கண்களும் வைத்துக்கொடுக்கிறோம். ரிஷபம், யானை, குதிரை, முதலிய வாகனங்களுக்கு உபயோகப்படும்படியான பலமாதிரியான போலிக்கண்ணாடிகளும் கிடைக்கும். வெளியூர்காரர்களுக்கு மூக்குக்கண்ணாடிகள் வேண்டுமானால் அவர்களின் சரியான வயதையும் தொழிலையும் மேல்விலாசத்தையும் தெளிவாய் எழுதினால் வி. பி. மூலமாய் அனுப்பப்படும் கண்களில் குற்றமுள்ளவர்கள் நேரில்வந்து கண்களை பரிசோதித்துக்கொண்டு மூக்குக்கண்ணாடிகள் வாங்கிக்கொள்ளவேண்டியது அல்லது கண் டாக்டர்களின் பிரிஸ்கிரிப்ஷனை அனுப்பினாலும் அதைப்போல கண்ணாடிகள் அனுப்பப்படும். சென்ற 40-வருஷகாலமாய் அநேக பல பெரிய பொருட்காட்சிகளிலும். சர்க்கார் கண் ஆஸ்பத்திரி டாக்டர்களிடத்திலும், வைஸராய லார்டுஆர்டிஞ்சிபாபு அவர்களிடத்திலும், சென்னப்பட்டணம் சர்க்கார் கண் ஆஸ்பத்திரியிலும் எங்களுடைய கண்ணாடிகளுக்கு தங்கமெடல்களும் அநேக நற்சாக்ஷிப்பத்திரங்களும் பெற்றிருக்கிறோம்.

விலை விபரம் தேவையுள்ளவர்களுக்கு கார்டில் அனுப்பப்படும்.




## கிராமக் கணக்குகளும் ரயத்துகளின் உரிமையும்.

[...]லை 22-ந் தேதியிட்டு கவர்ன் மெண்டார் பிற[...]ள்ள ஓர் உத்தரவில் குறிப்பிட்டிருப்பதாவது:—கிராம ரயதுகள் தங்களுக்குச் சொந்தமான அல்லது தங்களுக்குச் சிரத்தையுள்ள நிலங்கள் விஷயத்தில் கர்ணம் வைத்திருக்கிற 1, 6, 7, 10, 13, 14, 16, நெ. கணக்குகளை இலவசமாக வாங்கிப் பார்வையிட ஏற்கனவே கவர்மெண்டார் அனுமதித்திருந்தனர். இனி பர்மனெண்ட் ஏ பி. ரிஜிஸ்டர்கள் 2, 2 எ என்கிற கிராமக்கணக்குகள், ஸர்வேபிளான்கள், நில அளவு புத்தகங்கள் முதலியவற்றையும் கர்ணத்தினிடமிருந்து வாங்கி வேண்டியதைக் குறித்துக்கொள்ளலாம். சப் டிவிஷனல் புத்தகங்களைப் பார்க்கக் கொடுப்பது சாத்தியமில்லை. தாலூகா ஆபீசுக்கு அனுப்பப்பட்டுவிடுகின்றன. நடை முதல் பசலி. அதற்கு முந்திய பசலிக்கணக்குகளை மட்டுமே இவ்வாறு ரயத்துகளுக்குக் காண்பிக்கப்படும்.

## மலையாளம்ஜில்லா கிராமஉத்தியோகஸ்தர்கள். மகாநாடு

மலையாளம்ஜில்லா கிராம உத்தியோகஸ்தர்கள் மகாநாடு ஒன்று கள்ளிக்கோட்டையில் கூடிற்று. அக்கூட்டத்தில் "தண்டனை விதிக்கப்படும்" உங்கள் நடத்தையைப்பற்றி யோஜிக்கப்படும்" என்று தாலூகா ஆபீஸ் அதிகாரிகள் அடிக்கடி கிராம உத்தியோகஸ்தர்களுக்கு காரணமில்லாமல் எழுதுவதை நிறுத்தவேண்டுமென்றும், இப்பொழுதிருக்கும் சம்பளம்உயர்த்தப்படவேண்டுமென்றும் கவர்ன்மெண்ட் வேலைக்காககிராமஉத்தியோகஸ்தர்கள் போய் வருவதற்கு அவர்களுக்கு இரண்டாம் வகுப்பு படிச்செலவு கொடுக்க வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேறிற்று

---


ஒரு மகானால் அடியேனுடைய முன்னோர்க்கு அளித்த முறைப்படி
அவர்களால் கையாண்டு சௌக்கியத்தை யடைந்தும், அடியேனாலும்
கையாண்டு நன்மைகள் அடைந்திருக்கிறதுமான

## சகலவித குஷ்டம்.

குன்மம், காசம், நீர்ரோகம், யாவனைக்கால், கொடியமேகங்கள், மேகப்படைகள், பாரிசவாய்வு, கைகால்பிடிப்பு, திமிர்வாய்வு, பவுத்திரம், கண்டமாலை, கன்னப்புத்து, லிங்கப்புத்து, யோனிப்புத்து, முதலான ரோகங்களை கடவுள் கிருபையால் தகுந்த ஔஷதங்களைக்கொண்டு நிவர்த்தி செய்யப்படும்.

மைசூர் கெவர்ன்மெண்டாராலும். நியூயார்க், லண்டன், டோக்கியோ, பர்லின், பாரிஸ, அகமதாபாத், முதலிய தேசங்களின் இண்டர்நேஷனல் சொஸைட்டியாராலும், இங்கிலீஷ், டாக்டர்களாலும், பரிசீலனைசெய்து மெடலும். நற்சாக்ஷிபத்திரங்களும் பெற்றது.

கிருஷ்ண டெண்டல் பாம்.


இவ்வற்புத ஆயுள்வேத பற்பொடி சகல பல் வியாதிகளையும் போக்கி பற்களை உறுதியாக்கக்கூடியது.
பாட்டில் 1-க்கு விலை அணா 4. எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

M. R. ராஜகோபாலபிள்ளை,
ஸ்ரீ ஸந்தானகிருஷ்ண ஆயுள்வேத ஔஷதாலயம், மன்னார்குடி

ஸ்ரீ ராமஜெயம்.

South Indian Matchless Model Jewellery Mart C. B. R. Kumbakonam

முந்துங்கள். லாபமடைய இதுவே தருணம்




கனவான்களே !

இப்போது கும்பகோணம் பெரியகடைத்தெருவில் இருந்து வருகிற எங்கள் காசிக்கடை வியாபாரத்தை டையூர் பெரியதெரு டோர் 98 நெ. ஜெயவிலாஸம் என்ற எங்கள் செந்தக்கட்டடத்தில் நாளது சுக்கில வருஷம் ஐப்பிசிமீ 1உ முதல் மாற்றிக்கொண்டு போகிறபடியால் கனவான்கள் எப்பொழுதும்போல் அபிமானித்து, வேண்டிய எங்கள் C. B. R. முத்திரை போட்ட வெள்ளி சாமான்களும், பவுன் நகைகளும், சீமைக்கமலங்களும் இன்னும் பலவித நகைகளும் எங்களிடம் தயாராவதை வாங்கி அநுபவித்து ஆனந்திக்கக் கோருகிறோம்.

எங்களிடம் தயாராகும் பலவித நகைகளும் சாமான்களும் ரொம்பவும் உத்தரவாதமுள்ளது என்று வெகு நீண்டகாலமாக எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

இப்படிக்கு,

B. ரெங்கனாதம்செட்டியார்,
பவுன், வெள்ளி, வைர வியாபாரம்,
நெ, 98, "ஜெயவிலாஸம்" பெரியதெரு, கும்பகோணம்

N. B. போலி முத்திரை போட்ட நகைகளை வாங்கி ஏமாறாதீர்கள்.

223478



(238-வது பக்கம் தொடர்ச்சி)

27 கிராம உத்தியோகஸ்தர்களை எழுத்துமூலமான சமாதான மன்னியில் யாதொரு விதமான அபராதம், சஸ்பென்ஷன் டிஸ்மிஸ் முதலானதும் செய்யக்கூடாதென்று உத்தரவு இருந்தும் அதற்கு மாறாக நடந்து வருவதை நிறுத்த வேணுமாயும், மறு உத்தரவு வரையில் சஸ்பென்ஷன் என்கிற உத்தரவு போடுவதனால் காலஹரணங்களும அசௌகரியமும் ஏற்படுவதால் முடிவான உத்தரவு ஆகும்வரையில் சார்ஜ் கொடுக்கும்படி செய்யக்கூடாதென்றும் இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது,

28. கரணங்களும் கிராம முன்சீபைப்போலவே லோக்கல்போர்டுகளில் பிரதிநிதியாக நிற்க அநுமதிக்க வேணுமாய் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

29 கிராமத்தில் அடமானம் செய்யக் கூடிய தரிசு, புறம்போக்கு நிலங்களிருந்தால் அவைகளை அடமானம் செய்வதில் கறணங்களுக்கு அடமானம் செய்து கொடுக்கும்படியாய் இம் மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

30. கிராம உத்தியோகஸ்தர்களை லீவு சஸ்பென்ஷன் டிஸமிஸல் செய்து வேறு ஒருவரை நியமிக்கும்வரையில் அடுத்தபக்கத்திய கிராமங்களின் கிராம உத்தியோகஸ்தர்களை வேலைபார்த்து வரும்படி உத்திரவு செய்கிற கேஸ்களில் அவர்கள் வேலை பார்த்துவரும பூராகாலத்திற்கும மாதாமாதம சமபளம பூராவாய் கொடுக்க வேணுமாய் இம் மகாநாட்டார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

31. இரண்டு வட்டம் கர்ணீகர்கள் இனசம்மதமாய் மாற்றிக்கொள்ளவிரும்பினால் எக்காரணத்தைக்கொண்டும் நிராகரிக் காமல் அங்கீகரிக்கவேணுமாய் இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

32. கிராமக் கணக்குகளில் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எழுதும் ஷராக்களைத் தமிழில் எழுத வேணுமாய் இம்மகாநாட்டார் கேட்டுக் கொள்ளுகிறார்கள்.

33 கர்ணீகர்கள் சர்வே கற்கள் பார்க்கும் விஷயத்தில் மாதத்திற்கு எவ்வளவு கல் என்றுவது அரைக்கால் வருஷத்திற்கு எவ்வளவு என்றுவது குறிப்பிட்டு அபராதம் விதித்திருப்பதை நிறுத்தி வருஷமுடிவில் மட்டும் கவனிக்க வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

34. கிராம உத்தியோகஸ்தர்களை யாதொரு குற்றமும் சமத்தாமலும் சமாதானத்தைப் பெறுமலும் திடீரென்று சஸபெண்டு முதலிய உத்தரவுகளைப் பிறப்பிக்கும் வழக்கம் அமுலில் இருந்து வருவதை அதாவது தஞ்சாவூர் தாலூகா தருவாடிபட்டி கிராமமுன்சீபு சஸபெண்டு விஷயமாய்ப் பரிசீலனை செய்ய வேணுமாய் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

35. கவர்ன்மெண்டு குட்ஷியமாகவ கவர்ன்மெண்டு வக்கீலிடமாவது கோர்ட்டுகளிலாவது ஆஜாராகும் காலங்களுக்கு கி உக்களுக்குச் சிவில் புரொஸீஜர் கோடில் உள்ளபடி படிகொடுக்க வேணுமாய் இம் மகாநாட்டார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்

ஆதியே துணை.

பல் ஜாக்கிரதை.

தாங்கள் விலாஸம் தெரிவித்தால். சுகஜீவி கல்நார் பற்பொடி இனமாக அனுப்பப்படும்.

எங்கள் விலாஸம் :—

A. E, முஹையத்தீன்,
மெடிக்கல் ஹால்,
வலங்கைமான், தஞ்சைஜில்லா.

கம்ம பாலன்.
(மூன்றும் வருடம்)

பிரதி தமிழ்மாதக்கடைசியில் வெளிவரும் தமிழ் பத்திரிகை.

வருடசந்தா ரூபாய் ஒன்றுதான்,
கிராம வாசிகளுக்கு இன்றியமையாதது !
விளம்பர விகிதத்துக்கு எழுதுங்கள் !!

பத்திராதிபர் :—

ஆர். வேங்கடசாமி நாயுடு,
கம்மபாலன் ஆபீஸ், திருத்தங்கல்,
சிவகாசி சமீபம், S. I. R.

Rd. No. M. 1930. கிராமானுகூலன் Anl. Sub. Rs. 2.


மிகுந்த மணம்! எது? நிறைந்த குணம்!!

உலகப்பிரசித்திபெற்ற

ஜெயலெக்ஷிமி அண்டு கே[illegible]

வாஸனை திரவியசாலை,

பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

இந்த சுகந்தசாலையில் ஜெயலெக்ஷிமிமார்க் அடையாளமுள்ள சற்குண சந்தநெறி அகிலுடன் அரைக்கீரை விதைதைலம், நற்குணமுள்ள வாஸனை சந்தனம், பரிமளப் பாக்கு, மற்றமுள்ள வாஸனை சாமான்களும் சுகந்த வாசனையுள்ள லெவண்டு ஸோப் ரகங்களும் கிடைக்கும், எங்கள் திறமையான வாசனை திரவியங்களை மெச்சி பிரஸித்திபெற்ற தேசிய வாதியும் தன்னீர்குன்னம் மிராசுதாருமான ஸ்ரீமான் டி. எஸ் ராமபத்திர உடையார் அவர்களால் சித்திரக்குடியில் நடந்த விவாகத்தில் சப்ளை செய்ததற்காக "தங்கப் பதக்கம்" பரிசளித்திருக்கிறார். கேட்லாக் இனும்

மைசூர் உசூர் போக்கிஷகார்யதரிசி 15—5—29ல் எழுதுவதாவது :—

தங்களால் தயாரிக்கப்பட்ட வாசனை திரவியங்கள் யாவும் வந்துசேர்ந்தன. அவைகள் மிகுந்த கீர்த்தியானவைகளாக இருக்கின்றன.

A. ருஜகோபாலய்யங்கார் & பிரதர்ஸ்,
மானேஜிங் புரொப்ரைட்டர்ஸ்.

**1930** புதுவருஷப்பதிப்பு, **1930**

# "ஸ்ரீவித்யா"

ஜெம், ஜென்ட்ஸ், பாக்கெட், பிஸினஸ்

பாபுலர் அபிஷியல்

# டைரிகள்.

தென்இந்தியாமுழுவதும் நன்குமதிக்கப்பெற்றது,

எல்லாவிடங்களிலும் கிடைக்கும்,

பப்ளிஷர்ஸ்:—ஸ்ரீவித்யா பிரஸ்,
கும்பகோணம் (தென் இந்தியா)


Printed at the Lord Ripon Press and Published by N. Apathsahaya Ayyar at Kumba[illegible]